706

குண்டூசி

மே.... எட்டு அணா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUN 1949
MADRAS



மே 28உ வெளி வருகிறது

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பில்ம்ஸாரின்

நவஜீவனம்

நாகய்யா... கண்ணாம்பா... வரலக்ஷ்மி... ஜெயலக்ஷ்மி...
ஸ்ரீராமன்.. டி. ஆர். ராமச்சந்திரன் மற்றும் பலர்

உடனே எழுதுங்கள்!

சொற்ப பிரதிகளே உள்ளன

நக்ஷத்திர மாலை 2

"குண்டூசி" எழுதியது

★

எம். கே. டி. பாகவதர், கிருஷ்ணன்-மதுரம், ஹொன்னப்ப பாகவதர், பி. எஸ். கோவிந்தன், காமெடியன் சாரங்கபாணி, எம். கே. ராதா, எம். வி. ராஜம்மா, குமாரி ருக்மணி, வஸந்த கோகிலம், தனலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி போன்ற

21 சினிமா நக்ஷத்திரங்களின்
வாழ்க்கை வர்ணனையும்
அழகிய ஆர்ட் படங்களும்
அடங்கியது

விலை ரூ. 2. தபாற் செலவு அணா 6

வி. பி. பி. கிடையாது. முன் பணம் அனுப்பவும்.

"குண்டூசி" காரியாலயம்,
25, கிடங்குத் தெரு, சென்னை 1.

மே 28உ முதல்

தமிழ் நாட்டில் எல்லா முக்கிய நகரங்களிலும் நடைபெறுகிறது

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JUN 1949
MADRAS
269

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிக்சர்ஸ் தயாரித்த

நவ ஜீவனம்

நித்திய வாழ்க்கையில் நிகழும் விந்தைகளை நினைவுறுத்தும் சித்திரம்

நாகய்யா · கண்ணாம்பா · ஸ்ரீராமன் · வரலக்ஷ்மி ·

டி.ஏ. ஜயலக்ஷ்மி · டி.ஆர். ராமச்சந்திரன் · எல். நாராயண ராவ் நடித்தது

டைரக்ஷன்: **கே.பி. நாகபூஷணம்**

உங்களதிர்ஷ்டத்தில் எழுதி இருப்பதென்ன?

நீங்கள் ஒரு வருஷத்திற்குள் நடக்கும் சுபா சுபங்களை அறிந்துகொள்ள வேண்டுமெனில், இன்றே ஒரு கார்டில் உங்களுடைய விலாசம், ஒரு புஷ்பத்தின் பெயர் எழுதியனுப்புங்கள். நாங்கள் ஜோதிஷ சாஸ்திர கணிதப்படி உங்களுக்கு உண்டாகும் லாபநஷ்டங்கள், எந்த வியாபாரத்தால் லாபம் கிடைக்கும், எங்ஙனம் பொருள் சேரும், உத்தியோகம் எப்போது கிடைக்கும், வேலை ஆட்களுடைய அபிவிருத்தி, தம்பதிகளுடைய சௌக்கியம், ஆரோக்கியம், வியாதி, தூரப் பிரயாணங்கள், வியாஜ்ஜியம் அல்லது பரீக்ஷைகளில் தேர்ச்சி, கல்யாணம், பூமி அல்லது ஆஸ்தியினால் சுகம், புதிய நட்பு, உங்கள் கார்டு சேர்ந்தவுடனே மாதவாரி பலனும் வருட பலனும் ரூ. 1-4-0க்கு தபாலில் V.P.யில் அனுப்புகிறோம். தபாற் செலவு வேறு; துரதிர்ஷ்டத்தை அதிர்ஷ்டமாக்கிக் கொள்ளவும் வழியுண்டு; எழுதி அனுப்புகிறோம். இதனால் வரப்போகும் கஷ்டங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். ஒரு முறை பரீக்ஷித்தாலே தெரியும். உங்கள் ஜாதக பலன்களின் திண்மையை தப்பென்று ருஜு செய்தால் கட்டிய பணம் வாபீஸ்செய்யப்படும்.

SHRI SWAMI SATNARAIN JOTISH ASHRAM

(G.D.M.) JULLUNDER CITY.

13455

அழகிய நீடித்த சுருள் கேசத்திற்கு

ஹாலிவுட் ஹேர் கர்லிங் லோஷன் உபயோகியுங்கள்

இதன் பெயரிலிருந்து ஊகிப்பதைப் போன்றே இந்த கர்லிங் லோஷன் உங்கள் கேசத்தை பலவந்தமாகச் சுருளச் செய்கிறது. ஹானியற்றது என்பதற்கு உத்தரவாதம். தலையை வாரிவிட்டுக் கொள்வதாலும், ஸ்நானம் செய்வதாலும், மழையினாலும் பாதிக்கப்படாதது. இதை உபயோகித்த மூன்று தினங்களுக்குள் நல்ல பலன் அளிக்கிறது. ஒரு வார உபயோகத்தில் நிரந்தரமான சுருள் அலைகளை அளிக்கிறது. ஸினிமா நக்ஷத்திரங்கள் முதல், பள்ளி மாணுக்கர்கள் வரை அனைவராலும் விரும்பிப் போற்றப்படும் விபரம், இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் தினே தினே எங்களுக்கு வந்து குவியும் ஏராளமான புகழுரைக் கடிதங்களின் மூலம் நிரூபிக்கப் பட்டு விட்டது. ஒரு பாட்டில் விலை ரூ. 2-8-0. போஸ்டேஜ் தனி. ஒரே சமயம் 3 பாட்டில்களுக்கு ஆர்டர் செய்தால் போஸ்டேஜ் இனம்.

ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

THE AMRIT PHARMACY (G. M. M.) JULLUNDUR CITY.

உங்களுக்குத் தேவையான
எல்லாவித ஜவுளிகளுக்கும்
இன்றே

விஜயம் செய்யுங்கள்

MEERANS
மீரான்ஸ்

பக்கிங்காம் கர்னாட்டிக் மில் ஜவுளிகள், மேட்டூர் மில் ஜவுளிகள், பம்பாய், அஹமதாபாத் மில் ஜவுளிகள்
இவைகளுக்கு விநியோகஸ்தர்கள்

★

மற்றும் ட்விட்கள், உல்லன், வெளி நாட்டு ஜவுளிகள்
முதலிய எல்லாம் கைவசமுள்ளன

★

எஸ். மீரா சாகிப் அண்ட் பிரதர்ஸ்

38, ஈவ்னிங் பஸார் ரோடு, சென்னை.

தலைமை ஆபீஸ்:
19, கிடங்குத் தெரு, சென்னை-1.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JUN 1949
MADRAS

பட்டை 2. ஊசி 8.
மே 1949

இந்த ஊசியில்

ஒற்றுமை ஏற்படுமா	தலையங்கம்	5
உள்ளது உள்ளபடி	'ஜடாயு'	6
ஆனந்தி கல்யாணம்	செய்தி	7
வாஸன் வாழ்க!	செய்தி, படம்	8
எஸ். வரலக்ஷ்மி	வாழ்க்கை வர்ணனை	10
எஸ். வரலக்ஷ்மி	வர்ணப் படம்	17
"இளவரசி"	ஆர்ட் படம்	18
லாபத்தில் பங்கு	வி. எஸ். வெங்கடேசன்	19
குண்டூசியைக் கேளுங்கள்	பதில்கள்	22
செய்திப் படங்கள்	படங்கள்	31
பொது ஜனம் பேசுகிறார்	கடிதங்கள்	39
நுனிப்புல்	'வெட்டுக்கிளி'	42
இது செய்தி	பட்ச் செய்திகள்	45
பிரம்மலோகம்	ஸ்டுடியோச் செய்திகள்	50
"லைலா மஜ்னு"	ஆர்ட் படம்	51
டி. ஆர். மஹாலிங்கம்	வர்ணப் படம்	52
நவ ஜீவனம்	திரைக் கதை	57
குண்டூசி டைரி	தினக் குறிப்பு	68

குண்டூசி காரியாலயம்:
25, கிடங்குத் தெரு, சென்னை-1.
டெலிபோன்: 4316.

வருஷ சந்தா: இந்தியா, இலங்கை-ரூ. 6.
பர்மா, முதலிய வெளி நாடுகள்-ரூ. 9.

தனிப் பிரதி: இந்தியா—அணா. 8.
இலங்கை சதம்-50. வெளிநாடு-அ. 12.

ரூ. 300 இனும்

★

இந்த மகாகாளி இயந்திரத் தகட்டை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கைவசம் வைத்திருந்தால் நீங்கள் நினைத்தவை கைக்கூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்களுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ அது உங்களைத் தேடிவரும். இந்தத் தகட்டை கைவசம் வைத்துக் கொண்டு தியானம் பண்ணும்போது இந்த மகாகாளி தோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய்வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1-4-0. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3-2-0. உடனே பலன் தெரியக்கூடிய யந்திரத் தகடு ஒன்று தனி- சக்தி இல்லை யென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 இனும்.

THE BENGAL MESMERISM HOUSE (G.M.M)
JULLUNDER City.

நீங்கள் சினிமா நடிகர்களாக விரும்புகிறீர்களா ?

நீங்கள் நடிகராகவோ நடிகையாகவோ ஆகலாம். மாதத்திற்கு ரூ. *100* முதல் ரூ. *1500* வரை சம்பாதிக்கலாம். நீங்கள் அதிகம் படித்தவர்க இருக்க வேண்டிய அவசியமில்லை. விவரங்களுக்கு இன்றே ஆங்கிலத்தில் கடிதம் எழுதுங்கள்.

Director :

National Film Corporation
Halka No. 13,
(G. M. M.) JULLUNDER CITY.

பந்தயம் ரூ. 1000
மாய மோதிரம்



யோக சித்தி மாய சக்தியைக் கொண்டு இந்த மோதிரம் தயாரிக்கப்பட்டது. காரிய சித்தி ஏற்படும். கஷ்டங்கள் தீங்கும், பிறர் வசிய மாவார்கள். எக்காரியத்திலும் ஜெயம் ஏற்படும். நோய்கள் நீங்கும். உடனே பரீட்சித்துப் பாருங்கள். விலை ரூ. *1-15-0*. ஸ்பெஷல் ரூ. *3-15-0*. வெளி நாடுகளுக்கு *5* ஷில்லிங். ஸ்பெஷல் *10* ஷில்லிங். பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டருடன் எழுதுங்கள். பலனில்லை என்று நிரூபித்தால் விலை வாபீஸ்.

The Principal, The Oriental College of Mesmerism.
(G. M. M.) JULLUNDER CITY.

பட்டை 2
ஊசி 8

தண்டூசி

ஆசிரியர் பி.ஆர்.எஸ்.கோபால்

மே
1949

ஒற்றுமை ஏற்படுமா?

சர்க்கார் கண்டபடி வரிவிதித்து சினிமாத் தொழிலுக்குக் கஷ்டம் ஏற்படுத்துவதுபற்றியும், சினிமாத் தொழில் விஷயத்தில் அவர்கள் சிரத்தை எடுத்துக்கொள்ளாதது பற்றியும், சினிமாத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்ளும் நோக்கத்துடன் இந்தியா பூராவிலுமுள்ள தியேட்டர்களை ஜூன் 1-ந்தேதியன்று மூடி வைக்க ஏற்பாடாகி வருகிறது.

சினிமாத் தொழில் விஷயத்தில் சர்க்கார் சரியாக அக்கரை கொள்ளவில்லை என்பதும், மாகாணத்திற்கு மாகாணம் பல விதமாக தமாஷாவரி விதிக்கப் படுகிறதென்பதும் உண்மையே. சினிமாத் தொழிலுக்குள்ள குறைகள் நீக்கப் பட்டு, அதற்கு சர்க்காரின் மனமொத்த ஆதரவு ஏற்பட்டால்தான் இத் தொழில் சுபிக்ஷம் அடைய முடியும் என்பதும் உண்மையே.

இதெல்லாம் செய்யும்படி சர்க்காரை வற்புறுத்த வேண்டுமானால் அதற்கு சினிமாத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களிடையே தளராத ஒற்றுமையும், கட்டுப்பாடும் அவசியம் ஆகும். ஆனால், சினிமாத் தொழில் இந்தியாவில் தோன்றியது முதல் இன்று வரை, இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களிடையே ஒற்றுமையோ கட்டுப்பாடோ காணப்படவில்லை. இதை ஏற்படுத்துவதற்கான பல முயற்சிகளும் மிகுந்த பலனளிக்கவில்லை.

எனவே, இந்தியா பூராவிலுமுள்ள தியேட்டர்களை ஒரே நாளில் மூடி, அதிருப்தியைத் தெரிவிக்கச் செய்யப் படும் இம் முயற்சி வரவேற்கத் தக்கதே. இது வெற்றி பெறுமானால் இந்திய சினிமாத் தொழிலின் ஒத்துழையாமை சகாப்தம் முடிவுற்று ஒற்றுமை சகாப்தம் ஆரம்பம் ஆகிவிட்டதாகக் கொள்ளலாம். இந்தக் கட்டுப் பாடான எதிர்ப்பை சர்க்கார் நிச்சயம் புறக்கணிக்க மாட்டார்கள்; முடியவும் முடியாது.

ஆதலால் தமிழ் நாட்டுத் தியேட்டர்காரர்கள் அத்தனை பேரும் தென்னிந்திய பிலிம் சேம்பரின் தலைவர் ஸ்ரீ. கே. சுப்ரமண்யம் விடுத்துள்ள அறிக்கைக்கு இணங்கி தங்கள் தங்கள் தியேட்டர்களை ஜூன் மாதம் 1-ந் தேதியன்று மூடி வைக்க வேண்டியதைத் தம் கடமை எனக் கொள்ள வேண்டும். நம் தமிழ் நாட்டுத் தியேட்டர்கள் இக் கடமையைச் சரிவர நிறைவேற்றி வைப்பார்கள் என்று நாம் நம்புகிறோம்.

உள்ளது உள்ளபடி

ஜடாயு

இருட்டடிப்பு !

சமீபத்தில் என். எஸ். கிருஷ்ணன் இலங்கைக்கு விஜயம் செய்து விட்டு வந்தாரல்லவா? அது சம்பந்தமான ஒரு விஷயம் காதுக்கு எட்டுகிறது. என். எஸ். கே. யின் விஜயத்தைப் பற்றி இலங்கைப் பத்திரிகைகள் ஒருவரி கூட எழுதவில்லையாம். வரவேற்புக் கமிட்டியினர் பத்திரிகைக்காரர்களை ஏதோ அலக்ஷியமாய் நடத்தியதே இதற்குக் காரணமாம். பத்திரிகைக்காரர்களிடையே இலங்கையில் அவ்வளவு கட்டுப்பாடுள்ளது எனக்குச் சந்தோஷத்தை அளிக்கிறது.

நிலைமை வேறு

ஆனால் இந்தியாவிலோ நிலைமை வேறு. பத்திரிகைக்காரர்களை பட உலகத்தினரும், நாடக உலகத்தினரும் எவ்விதம் சரிவர நடத்தத் தவறிப் போகிறார்கள் என்பதை மார்ச் மாத ஊசியில் எழுதியிருந்தேன். அதில் "ஒரு நாடக கம்பெனியார் இரவு 9½ மணி ஆட்டத்திற்கு விமர்சகர்களை வரவழைப்பதால் விமர்சகர்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படுகிற"தென்பதை விளக்கியிருந்தேன். நான் எழுதின சூட்டோடு சூடாக, "நாடகக் கம்பெனி மட்டும் என்ன? நாங்கள் கூட அந்த மாதிரி செய்யக் கூடும்" என்று கூறுவதே போல் ஒரு சினிமாப் படக் கம்பெனியும் பத்திரிகைக் காட்சியை இரவு 9½ மணிக்கு வைத்துக் கொண்டது. அன்றிரவு காட்சிக்கு விஜயம் செய்த விமர்சகர்களில் எத்தனை பேர் வீடு திரும்புவதற்கு எவ்வளவு கஷ்டம் அடைந்தார்களோ? ஆண்டவனுக்கே வெளிச்சம்!

நான் மேலே குறிப்பிட்ட 9½ மணிப் பத்திரிகைக் காட்சிக்கு (ஆச்சரியப் படத்தக்க வகையில்!) அழைக்கப் பட்டிருந்தவர்கள் அத்தனை பேரும் விஜயம் செய்திருந்தனர். தாங்கள் அன்றிரவு அநுபவிக்க வேண்டிய கஷ்டங்களை யாரும் முன்னதாக யோசித்ததாயும் காணோம். இதைப் பார்த்த பின், இனியொரு பட முதலாளி இரவு 2 மணிக்கு பத்திரிகைக் காட்சி நடத்தினால் கூட விமர்சகர்கள் வருவார்கள் என்றே தோன்றுகிறது!

மாற்றுந் தாய் நடத்தை

பத்திரிகைக் காரர்களை முக்கியமாக சினிமாப் பத்திரிகைக்காரர்களை நம் பட முதலாளிகளில் பெரும்பாலோர் மாற்றுந்தாயின் அன்புடனேயே நடத்தி வருகின்றனர். சினிமாக் கலை-தொழில் இவைகளின் நலனுக்காகவே நடத்தப்படும் சினிமாப் பத்திரிகைகளுக்கு அதிக ஆதரவு அளிக்க வேண்டுமென்பதை அவர்கள் உணரவில்லை. அவர்கள் உணராதது ஒருபுறமிருக் கட்டும். தாம் இவ்விதமெல்லாம் நடத்தப் படுவதை எதிர்ப்பதற்கும், தமக்குள்ள குறைகளை நீக்கிக் கொள்ளுவதற்கும் நம் சினிமாப் பத்திரிகைக்காரர்கள் முயலாதது ஆச்சரியமல்லவா?

சங்கம் அவசியம்

தங்களிடையே மிகுந்த ஒற்றுமை இருந்ததாலேயே இலங்கைப் பத்திரிகாசிரியர்கள் தங்கள் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும், அதைப் பற்றி பிறர் பாராட்டவும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தென்னிந்திய சினிமாப் பத்திரிகாசிரியர்கள் ஒன்று சேர்ந்து ஒரு சங்கத்தை அமைத்துக் கொள்ள வேண்டியது அத்தியாவசியம் என தற்போதைய நிலைமைகள் வற்புறுத்துகின்றன.

சினிமாப் பத்திரிகாசிரியர்கள் தங்கள் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும், தங்கள் நலன்களை காத்துக் கொள்ளவும், தங்களிடையே ஒற்றுமையை வளர்த்துக் கொள்ளவும், எதிர் காலத்தில் சினிமாப் பத்திரிகைகள் இப்போதையை விட நல்ல நிலைமையை அடையவும் வேண்டுமானால் சினிமா ஆசிரியர்கள் சங்கம் நிறுவப் பட வேண்டியது இன்றியமையாததாகும். இவ்வித முயற்சிக்கு நான் பூரண ஆதரவளிக்கத் தயாராயிருக்கிறேன்.

பொலோநாத் கோர மரணம்

நடன டைரெக்டரும், பி. எஸ். சரோஜாவின் கணவருமான போலோநாத் இப்மாதம் 12-ம் தேதி சேலத்துக்கு அருகில் கார் விபத்தினால் கோர மரணமடைந்தார். சென்னையிலிருந்து சேலத்துக்கு தமது காரில், பி. எஸ். சரோஜாவுடனும், குழந்தையுடனும் போய்க்

ஆனந்தி கல்யாணம்

பரதநாட்டியத்தின் மூலம் பிரபலம் அடைந்துள்ள ஆனந்தி பிரபல ஆசிரியர் 'கல்கி' அவர்களுடைய புத்ரி என்பது அனேகருக்குத் தெரிந்திருக்கும். இந்த சௌ. ஆனந்திக்கும் கல்கி பத்திரிகையின் மானேஜிங் டைரெக்டர் ஸ்ரீ. டி. சதாசிவம் அவர்களின் மருமான் சி. என். ராமச்சந்திரனுக்கும் இம்மாதம் 15-ந் தேதியன்று கீழ்ப்பாக்கத்தில் கன ஜோராகக் கலியாணம் நடந்தேறியது.

சென்ற இருபது வருஷ காலத்தில் எவ்வளவோ சிறு கதை எழுத்தாளர்கள் தோன்றியுள்ளனர்; எனினும் அன்று முதல் இன்று வரை தமிழ் வாசகர்களின் பேரபிமானத்தை 'கல்கி' யவ்வளவு வேறு எந்த எழுத்தாளனும் பெறவில்லை என்று நான் துணிந்து கூறுவேன். 'கல்கி' தமிழ் எழுத்தாளர்களுக்கும், தமிழ் பத்திரிகை உலகத்திற்கும் ஒரு சிறந்த பிரதிநிதியாக இன்று விளங்குகிறார். எனவே அவர் நடத்திய கலியாண வரவேற்பு விருந்து தமிழ் எழுத்தாளர்களுக்கும், தமிழ் பத்திரிகை உலகத்திற்குமே இணையற்ற கௌரவத்தை அளிப்பதாக இருந்தது என்று கூற வேண்டும்.

கலியாணத்தன்று மாலை ஒரு வரவேற்பு விருந்திற்கு பிரமாதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வழி நெடுக அலங்கார விளக்குகள்; போலீஸ் பந்தோபஸ்து; பாண்டு வாத்யம்; விஸ்தாரமான மைதானத்தில் சிற்றுண்டி விருந்திற்கான மேஜை நாற்காலிகள். வந்திருந்தவர்களோ என்றால் கவர்னர் முதலான பெரிய பெரிய சர்க்கார் அதிகாரிகள்; குமாரசாமி ராஜா முதலான மந்திரிமார்கள்; காமராஜ் நாடார் முதலான அரசியல் தலைவர்கள். இன்னும் பத்திரிகாசிரியர்கள், பொது ஜனப் பிரமுகர்கள், பட முதலாளிகள், டைரெக்டர்கள், இந்த சூழ்நிலையில் நமது கவர்னர் ஜெனரல் ராஜாஜி தம் மெய்க்காப்பாளர்கள் பின் தொடர, புதுத் தம்பதிகளை அழைத்துக் கொண்டு விருந்து மைதானத்திற்கு விஜயம் செய்தார். பாண்டுக்காரர்கள் "ஜன கண மன" முழங்கினர். எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.

இந்தக் கோலாகலத்தைக் கண்டவர்களுக்கு அது 'கல்கி' மகளின் கலியாண விருந்து என்ற விஷயமே மறந்து போயிற்று. ராஜாஜி கவர்னர் ஜெனரல் பதவி ஏற்றதற்காக நடத்தப்படும் ஒரு விருந்து போலவே தோன்றியது.

சிற்றுண்டி விருந்திற்குப் பிறகு செம்பை வைத்தியநாத பாகவதரின் இன்னிசை விருந்து நடைபெற்றது. இதற்கு மறுநாள் மதுரை மணி ஐயர் தம் அபூர்வ சங்கீதத் திறமையால் ஆனந்தியின் கலியாண விருந்தினரை ஆனந்திக்கச் செய்தார்.

கொண்டிருந்தார். பனைமரம் ஒன்றில் கார் மோதியதனால் விபத்து நேரிட்டது. சரோஜாவுக்கு முகத்திலும் உதட்டிலும் காயம் பட்டு இரு பற்களும் போய்விட்டன. இப்பொழுது சரோஜா சென்னையிலுள்ள ஒரு நர்ஸிங் ஹோமில் சிகிச்சை பெற்று குணமடைந்து வருகிறார். போலோநாத்தின் கோர மரணத்திற்காக நாம் மிக வருந்துகிறோம். அதே சமயத்தில் சரோஜா சொற்பக் காயங்களுடன் தப்பியதற்காக சந்தோஷம் அடைகிறோம்.

வாஸன் வாழ்க!

"உன் வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக் கூடாது' என்பது ஏசுநாதரின் உபதேசம். ஆனால் தற்காலத்தில் தானம் செய்பவர்களில் பெரும்பாலோர், ஒன்று ஏதாவது லாபத்தைக் கருதியோ, அல்லது "சுய விளம்பரத்தைக் கருதியோ, அல்லது தற்பெருமைக்காகவோதான் செய்கிறார்கள். எவ்வித பிரதிபலனுமின்றி, தாம் அளிக்கும் தானம் எல்லோராலும் கவனிக்கப்பட வேண்டும். புகழப்பட வேண்டும் என்ற எண்ணமின்றி ஓசைப்படாமல் தானம் செய்பவர்கள் லக்ஷத்தில் ஒருவர் தான். ஒரு லக்ஷ ரூபாய்களை சந்தடியின்றி நன்கொடையாக அளித்துவிட்டு அந்த லக்ஷத்தில் ஒருவராக ஆகி விட்டார் ஜெமினியின் அதிபர் ஸ்ரீ. எஸ். எஸ். வாஸன்.

கோடி கோடியாக சம்பாதித்தவர்களையும், சம்பாதித்துக் கொண்டிருப்பவர்களையும் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் 'கொடுப்பது' என்பதுதான் அவர்களிடம் இல்லாத குணமாய் இருக்கும். ஸ்ரீ. எஸ். எஸ். வாஸன் இருக்கிறாரே, அவருடைய போக்கே அலாதி. "நிறைய சம்பாதிக்க வேண்டும்; நிறையக் கொடுக்க வேண்டும்" என்பது அவரது லக்ஷியம். அதற்கிணங்க அவர் "ஆனந்த விகடன்", "ஜெமினி" ஊழியர்களுக்கு தாராளமான சம்பளம் கொடுத்து வருகிறார். தவிர லாபம் வரும்போதெல்லாம் போனஸ்களையும் அள்ளிக் கொடுக்கிறார். தொழிலாளியும், முதலாளியும் எவ்விதம் அந்நியோன்னியமாக இருக்கவேண்டும் என்பதற்கு ஸ்ரீ. வாஸனையும் அவரது ஊழியர்களையும் உதாரணமாய்க் கூறலாம்.

ஸ்ரீ. வாஸனின் உதார குணம் அவரது ஊழியர்களுடன் நின்று விடவில்லை. ஸ்ரீ. ராஜன்பாபு சென்ற மாதக் கடைசியில் சென்னைக்கு விஜயம் செய்தாரல்லவா? அந்த சமயம் (ஏப்ரல் 29-ந் தேதி யன்று) ஸ்ரீ. வாஸனுக்கு திடீரென்று ஒரு எண்ணம் ஏற்பட்டது. ராஜன்பாபுவை தம் ஸ்டுடியோவுக்கு வரவழைத்து அவரிடம் காந்திஜி ஞாபகார்த்த நிதிக்காக ஒரு லக்ஷ ரூபாயை சமர்ப்பிப்பது என்று தீர்மானித்தார்.

மறு நிமஷமே இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சில முக்கிய பத்திரிகாசியர்களுக்கு மட்டும் டெலிபோன் மூலம் விஷயத்தைத் தெரிவித்து வரவழைக்கப் பட்டனர். ராஜன்பாபுவும் விஜயம் செய்தார். சொற்பப் பேர்களே விஜயம் செய்திருந்த இவ் விருந்தில் லக்ஷ ரூபாய் மதிப்புள்ள ஒரு செக்கை ஸ்ரீ. வாஸன் பாபுஜியிடம் சமர்ப்பித்தார். பாபுஜி, ஸ்ரீ. வாஸனின் உதார குணத்தைப் பாராட்டி சில வார்த்தைகள் பேசினார். இந்த விஷயம் பத்திரிகைகளில் வெளிவந்த பின்னரே பொதுஜனங்களுக்குத் தெரியலாயிற்று.

பண வசதியும், இட வசதியும், ஆள் வசதியும் உள்ள ஸ்ரீ. வாஸன் நினைத்திருந்தால் இந்த வைபவத்திற்கு ஊரையே கூட்டியிருக்கக் கூடும். அப்படியின்றி அவர் சந்தடியில்லாமல் இந்த தானத்தைச் செய்திருப்பதிலேயே அவரது பெருந்தன்மை அதிகமாய் பிரதிபலிக்கிறது.

ஸ்ரீ. வாஸனையும், ஜெமினியையும் உதாரணமாக வைத்துக் கொண்டு அநேக படமுதலாளிகள் பின்பற்றி வருகிறார்கள். இந்த நன்கொடை விஷயத்திலும் அவரை மற்ற படமுதலாளிகள் பின்பற்றுவார்களானால் தென்னிந்தியாவிற்கே தனி மதிப் பேற்பட்டு விடும். வேறு படமுதலாளி எவரேனும் இதைவிட அதிக நன்கொடை அளித்து ஸ்ரீ. வாஸனைத் தோற்கடித்தால், ஸ்ரீ. வாஸன் உள்பட எல்லோருமே அவரைப் பாராட்டுவார்கள் என்பது நிச்சயம்.

ஸ்ரீ. வாஸன் நன்கொடை அளித்த வைபவம் சம்பந்தமான படங்கள் எதிர்ப்பக்கத்தில் வெளியாகியுள்ளன.

எஸ். வரலக்ஷ்மி

முதன் முதலாக வெளி வந்துள்ள தமிழ்ப் பேசும் படமான காளிதாஸில் டி. பி. ராஜலக்ஷ்மி நடித்தாலும் நடித்தார்; அவரைப் பின்பற்றி ஏராளமான ராஜலக்ஷ்மிகள் சினிமா உலகில் தோன்றி விட்டனர். மற்றும் 'ராஜம்', 'ராஜாமணி', 'ராஜாம்பாள்' என்பவை போன்ற பெயர்க

க்கை வர்ணனை

ளும் சினிமா உலகத்தில் ஏராளமாய்த் தோன்றியுள்ளன. பிறகு, கே. ஆர். சாரதாம்பாள், எஸ். டி. சுப்புலக்ஷ்மி, கே. டி. ருக்மணி இவர்களைப் பின்பற்றி அநேக சாரதாம்பாள்களும், சுப்புலக்ஷ்மிகளும், ருக்மணிகளும் படவுலகில் குவிந்தனர். எந்தப் படத்தில் எந்த சாரதாம்பாள், அல்லது எந்த சுப்புலக்ஷ்மி, அல்லது எந்த ராஜலக்ஷ்மி நடித்திருக்கிறார் என்ற விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள முடியாமல் ரஸிகர்கள் திண்டாடினர்.

சமீப காலத்தில் ரஸிகர்களின் மூளைகளை பிரமாதமாகக் குழம்பச் செய்தது எம். எஸ். சரோஜா, எம். எஸ். சரோஜினி ஆகிய பெயர்களே யாகும். "இந்த இருவரும் ஒரே நபர்தானா?" என்ற கேள்வியை என்னிடம் சுமார் ஆயிரம் பேர்களாவது கேட்டிருப்பார்கள். நானும் ஐம்பது தடவையாவது "இல்லவே யில்லை" என்று பதிலளித்திருப்பேன். இன்னமும் கூட சிலர், "இருவரும் ஒருவரே" என்று நினைத்துக் கொண்டிருந்தாலும் நான் ஆச்சரியப்படுவதற்கில்லை!

நல்ல வேளையாக, இரண்டு வருஷங்களுக்கு முன் எம். எஸ். சரோஜா சினிமாப் படங்களில் நடிப்பதை நிறுத்தியதும் இந்தக் குழப்ப நிலைமை ஒருவாறு தணிந்தது. அதோடு கூட புதிதாகத் தோன்றிய நடிகைகள் புதுப் புதுப் பெயர்களை வைத்துக்கொண்டு வந்ததால், "இனிமேல் இது போன்ற பெயர்த் தடுமாற்றங்கள் குறைந்து போகும்" என்று எண்ணி நான் உள்ளூர மிகவும் சந்தோஷப்பட்டேன்.





குண்டு

சேவாசதனம்

ஆனால், சென்ற வருஷத்திய சில சம்பவங்கள் என் சந்தோஷத்தை நீடிக்காமற் செய்து விட்டன. அடேயப்பா! அந்த ''வரலக்ஷ்மி'' என்ற அழகான பெயர் எத்தனை பேர்களது மூளையைக் குழப்பி விட்டது தெரியுமா? முன்பெல்லாமாவது ரஸிகர்கள் மட்டுமே தடுமாறி வந்தனர். ஆனால் இந்தப் பெயர் விஷயத்திலோ சில பத்திரிகாசிரியர்கள்கூட ஏமாந்து விட்டனர் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

ஒரு நாள் சாயந்திரம் என் காரியாலயத்திற்கு ஐந்தாறு வாலிபர்கள் சேர்ந்தாற்போல் 'விஜயம்' செய்தனர். அவர்களில் ஒருவர் முன் வந்து வரலக்ஷ்மியைப் பற்றிய ஒரு வினாத்தாளை என்னிடம் சமர்ப்பித்து, நீங்கள் இந்தக் கேள்விகளுக்கு இப்பொழுதே எங்களுக்குப் பதில் சொல்லி விடவேண்டும். நாங்கள் இது சம்பந்தமாக ஒரு பந்தயம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

அந்த வினாத்தாளில் பின் வரும் கேள்விகள் எழுதப்பட்டிருந்தன:—

( ) ஆ. த. அபூர்வ சிந்தாமணியிலும், மிஸ் மாலினியிலும், விந்தியா ராணி, துரோகி, பாலாஜு ஆகிய படங்களிலும் நடித்துள்ளவர் ஒரே வரலக்ஷ்மியா? அல்லது வெவ்வேறு நபர்களா?

சதிமுரளி

(2) முன்பு சதி முரளி, ஜகதலப்ர தாபன் ஆகியவற்றில் நடித்துள்ள அதே வரலக்ஷ்மிதானா இப்பொழுது அபூர்வ சிந்தாமணியில் நடித்திருக்கிறார்? அல்லது இந்த வரலக்ஷ்மி வேறு நபரா?

(3) முன்பு ராம பிரம்மத்தின் படங்களில் நடித்து வந்தாரே ஒரு வரலக்ஷ்மி; அவர் இப்பொழுது சினிமாவில் நடிக்கிறாரா?

மேற்படி 3 கேள்விகளையும் படித்ததும் உங்களுக்கு தலை சுற்றுகிறதல்லவா? எனக்கே முதலில் தடுமாற்றம் ஏற்பட்டு விட்டது. பரீட்க்ஷையில் விடை எழுதத்தெரியாத மாணவனைப் போல் விழித்தேன். அந்தப் பையன்களை எதிரிலிருந்த பெஞ்சியில் உட்காரச் சொல்லி விட்டு, என் ஞாபக சக்தியை அலச ஆரம்பித்தேன். இதைப் பற்றி நான் எவ்வளவு தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தேனோ அவ்வளவு தீவிரமாக என் குழப்பங்கள் அதிகரித்தன. நல்லவேளையாக, ஐந்து நிமிஷ நேரப் போராட்டத்திற்குப் பிறகு ஒரு முடிவிற்கு வந்தேன். அந்தப் பையன்களுக்குப் பின் வருமாறு பதிலளித்தேன்:

''தென்னிந்திய சினிமா உலகில் இப்பொழுது மூன்று வரலக்ஷ்மிகள் பிரபலமாயுள்ளனர். மிஸ் மாலினியில் நடித்த வரலக்ஷ்மி ஒருவர், அதற்கு முன்பேயும் அவர் சில தமிழ்ப் படங்களில் நடித்திருக்கிறார்.

''இரண்டாவது வரலக்ஷ்மி விந்தியாராணி, துரோகி போன்ற சில தெலுங்குப் படங்களில் மட்டும் நடித்திருக்கிறார்.

இல்லாளு



ஆராய்ச்சிமணி

" ஆயிரம் தலைவாங்கி, போஜன் ஆகிய படங்களில் நடித்துள்ளவர் மூன்றுவது வரலக்ஷ்மி. முன்பு சதி முரளி, ஜெகதலப்ரதாபன் முதலிய தமிழ்ப் படங்களிலும், ராமபிரம்மத்தின் தெலுங்குப் படங்களிலும் நடித்திருக்கும் வரலக்ஷ்மி இவரே தான்."

இந்தப் பதிலை நான் சொல்லி வாய் மூடு முன், அந்தக் கும்பலில் மிகத் துறு துறுப்பாய் காணப் பட்ட ஒரு பையன், "டேய், பார்த்தீங்களா! நான்தானே ஜெயித்தேன்!" என்று உரக்கக் கத்தினன். அடுத்த விநாடியே தான் செய்தது தவறு என்பதை உணர்ந்து கொண்டு சட்டென்று கையால் வாயைப் பொத்திக் கொண்டான். பிறகு அந்தப் பையன்கள், "தாங்க்ஸ், ஸார்!" என்று சேர்ந்தாற் போல சொல்லி விட்டு, சிப்பாய்களைப் போல் சலாம் செய்தபின், சளசள வென்று பேசிக் கொண்டே வெளியே சென்றனர்.

* * *

இவ்வளவு குழப்பங்களுக்கும் முக்கிய பொறுப்பாளியாக உள்ள அந்த மூன்றுவது (எஸ்.) வரலக்ஷ்மி தான் இந்த வாழ்க்கை வர்ணனையின் கதாநாயகி. அவரைப் பற்றி நான் எழுதப்போகும் இந்த வாழ்க்கை வர்ணனையும் ஒரே குழப்பமாய் இருக்குமோ என்று நீங்கள் பயப்பட வேண்டியதில்லை!

எதிர்பாராத விதத்தில் சினிமாத் தொழிலுக்கு வந்துள்ளவர்களின் ஜாபிதாவில் சேர்க்கப் பட வேண்டியவரே இந்த வரலக்ஷ்மி. ராஜமஹேந்திர புரத்திற்கு அருகாமையில் உள்ள அவரது சொந்த ஊரான

அபவாது

ஜெகம்பேட்டையிலிருந்த வரலக்ஷ்மி தம் ஆறுவது வயதில் பள்ளிப் படிப்பிற்காக கர்னூலில் இருந்த தம் பெரியப்பாவின் வீட்டிற்கு அனுப்பப் பட்டார். அவரது பெரியப்பாவான ரங்கப்பா நாயுடு கர்னூலிலுள்ள ஒரு மிஷனரி பெண் பாடசாலையில் உபாத்தியாயராக இருந்து வந்தார். அதோடுகூட அவர் ஒரு சங்கீத வித்வானும் ஆவார். ஆதலால், அவர் வரலக்ஷ்மிக்கு படிப்பில் மட்டுமன்றி சங்கீதத்திலும் குருவாக அமைந்தார். வரலக்ஷ்மி கடவுள் கிருபையால் இனிய சாரீர சம்பத்தைப் பெற்றிருப்பதால், சிறு வயது முதலே அவர் பிறர் முன்னிலையில் பாடிப் பாராட்டுதலைப் பெற்று வந்தார்.

பள்ளிக் கூடத்தில் அவரது சிநேகிதிகள் அவரை மிகவும் நேசித்து வந்தனர். இடை வேளையில் பெஞ்சுகளை கச்சேரி மேடை மாதிரி நகர்த்திப் போட்டு, அவை மீது வரலக்ஷ்மியை அமர்ந்து பாடச் சொல்லிக் கேட்பார்களாம். நாலு பேர் அவரைப் புகழவும், சுற்றிச் சுற்றி வரவும், அவர் அப்பொழுது அந்தப் பள்ளிக்கூடக் கதாநாயகியாகி விட்டார். அது மட்டுமல்ல; பள்ளிக்கூட நாடகங்களிலும் வரலக்ஷ்மிக்கு நிறையப் பாட்டுள்ள வேஷங்களைக் கொடுத்து நடிக்கச் செய்தார்களாம். அந்தக் காலத்தில் அவரிடம் காணப் பட்ட துறுதுறுப்பும் 'வெடுக் வெடுக்' என்று பேசும் சுபாவமும் எல்லோர் கவனத்தையும் கவர்ந்தன. இந்தக் குணங்களே அவருக்கு சினிமாத் தொழிலையும், அதில் வெற்றியையும் அளித்துள்ளன.

வரலக்ஷ்மிக்கு சுமார் பத்து வயதாயிருக்கும். அப்பொழுது ஒரு நாள் அவரது பெரியப்பாவைப் பார்ப்பதற்காக, காலஞ் சென்ற தெலுங்குப் பட டைரெக்டர் ராமபிரம்மம் அந்த மிஷனரி பள்ளிக்கூடத்திற்கு விஜயம் செய்தார். தாம், தெலுங்கு "பாலயோகினி" என்ற படத்தைத் தயாரிக்கப் போவதாகவும், அந்தப் பள்ளிக்கூட மாணவிகளுள் திறமையுள்ளவர்களை அப்படத்தில் சேர்த்துக்கொள்ள விரும்புவதாகவும் ரங்கப்பா நாயுடுவிடம் ராமபிரம்மம் தெரிவித்தார்.

அவர் இப்படிச் சொல்லி வாய் மூடு முன் அந்த அறைக்குள் வரலக்ஷ்மி நுழைந்தார். அவரது துறுதுறுப்பான குணங்களும், நல்ல முகவெட்டும் ராமபிரம்மத்தைச் சட்டெனக் கவர்ந்தன. உடனே அவர் ரங்கப்பா நாயுடுவிடம், "இந்தப் பெண் யார்?" என்று விசாரித்தார்.



"என் தம்பியின் பெண்" என்று ரங்கப்பா தெரிவித்தார்.

"அப்படியானால் அவளை கட்டாயம் பாலயோகினியில் நடிக்க அனுமதியுங்கள்" என்று கேட்டார்.

முதலில் ரங்கப்பா இந்த யோசனைக்கு மறுத்தார் என்றாலும், முடிவில் ஒப்புக் கொண்டுவிட்டார். வரலக்ஷ்மி அதன் விளைவாக தம் பெற்றோர்களுடன் சென்னைக்கு வந்து குடியேறினர்.

தெலுங்கு பாலயோகினி படம் தயாராகி வெளி வந்தது. அதில் வரலக்ஷ்மி வேலைக்கார முனுசாமியின் மகளாக நடித்திருக்கிறார். (தமிழ் பாலயோகினியில் இதே பாகத்தில் குமாரி ருக்மணி தோன்றியிருக்கிறார் என்பது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும்) தமிழ் பாலயோகினி தமிழ் நாட்டில் பிரமாத வெற்றியைப் பெற்றது. ஆனால் தெலுங்கு பாலயோகினியோ படு தோல்வியாகவே முடிந்தது. வரலக்ஷ்மியின் நடிப்பும் அதில் சோபிக்கவில்லை.

சென்னைக்கு வந்து குடியேறிய வரலக்ஷ்மியின் வாழ்க்கையில் சில முக்கிய மாறுதல்கள் ஏற்படலாயின. வரலக்ஷ்மியை பாலயோகினி படத்தில் மட்டும் நடிக்கச் செய்து விட்டு,

தொடர்ச்சி
53-ம் பக்கத்தில்

லாபத்தில் பங்கு

வி.எஸ். வெங்கடேசன்

"மல்லிகா, இனி நமக்கு நல்ல காலம். நீ இஷ்டப்பட்டதையெல்லாம் இன்னும் கொஞ்ச நாளிலேயே வாங்கிக்கொடுத்து விடுகிறேன்" என்று சந்தோஷமாகச் சொன்னார் டைரெக்டர் குமார்.

"என்ன விசேஷம்? நாதன் உங்கள் சம்பளத்தை உயர்த்தியிருக்கிறாரா, என்ன?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் மல்லிகா.

"ஹூம். நாதனை விட்டுத் தள்ளு. அவனைத்தான் நேற்றே தலை முழுகி விட்டேனே!"

"என்ன நாதனை........?"

"உன்னிடம் சொல்லவில்லையா? ஹூம், மறந்து விட்டேன். இத்தனை நாள் வரை நாதன் என்னை வாட்டி, பணத்தைக் குவித்து வந்தான். அது எனக்கு தெரிந்து போய், நான் லாபத்தில் பங்கு கேட்டேன்."

"நாதனாவது உங்களை வாட்டுவதாவது? என்ன இன்று இப்படிப் பேசுகிறீர்கள்?"

"ஆமாம்; பித்தம் தலைக்கேறிவிட்டது, பிதற்றுகிறேன்........உன்னிடம் போய்ச் சொல்ல வந்தேனே!"

"விஷயத்தை விபரமாகச் சொல்லுங்கள். எனக்கு என்னவோ போலிருக்கிறது."

"விஷயம் இது தான். நான் அவனிடம் லாபத்தில் பங்கு கேட்டேன். அவன் முடியாது என்றான். உடனே வேலையை ராஜீநாமாச் செய்து விட்டேன்" என்று சாவதானமாகச் சொன்னார் குமார்.

"நீங்கள் செய்தது பெரிய தப்பு, இப்படிச் செய்திருக்கவே கூடாது."

"தப்பைக் கண்டு விட்டாள் தப்பை. அவன் என் ரத்தத்தை உறுஞ்சி, பணத்தைச் சேர்ப்பானாம், நான் அதில் பங்கு கேட்கக் கூடாதாம். இது என்ன நியாயம்?"

"எனக்குத் தெரிந்த வரை நீங்கள் செய்தது தப்புதான். நாதனுக்கு ஸ்டுடியோ வைக்க வேண்டும் என்று என்ன வந்தது? அவருக்கு உள்ள சொத்தை வைத்துக் கொண்டே ஹாய்யாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கலாம். உங்கள் தன்மையை உத்தேசித்து, உங்களை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில்தான் ஸ்டுடியோவை ஆரம்பித்தார். அவர் அதிர்ஷ்டமோ, உங்கள் நல்ல காலமோ அதில் நிறைய லாபம் கிடைத்தது, இன்று ஸ்டுடியோ பிரபலம் அடைந்திருக்கிறது. இதைக் கண்டு நீங்கள் சந்தோஷிப்பதற்குப் பதில் அவரையே பகைத்துக் கொள்வதா?"

"ஸ்டுடியோ பிரபலம் அடைவதைக் கண்டு சந்தோஷப்பட்டால் போதுமா? இந்த நிலைக்குக் கொண்டுவந்த என்னையும் அவன் கொஞ்சம் கவனிக்க வேண்டும், இல்லையா?"

"உங்களை அவர் என்ன குறைச்சலாக விட்டு வைத்திருக்கிறார்? பங்களா, மோட்டார், முதலியவைகளை வாங்கிக் கொடுத்திருக்கிறார். மாதம் இரண்டா

ஆயிரம் ரூபாய்? சம்பளம் கொடுக்கிறார். போனஸ் வேறு கூடக் கொடுக்கிறார். இன்னமும் என்னதான் வேண்டும் என்கிறீர்கள்? கேட்பதற்கும் ஒரு எல்லை இல்லையா?"

"பெரிய எல்லையைக் கண்டுவிட்டாள். இன்று நான் இல்லை என்றால் அந்த ஸ்டுடியோ அதோகதிதான். அப்படியிருந்தும் அவன் எனக்குப் பங்கு கொடுக்க மறுக்கிறான்."

"நீங்கள் இல்லா விட்டால் ஸ்டுடியோ இல்லாமல் போகட்டும். அதனால் நாதனுக்கு என்ன நஷ்டம்? அவர் இந்த ஸ்டுடியோவைவைத்துக் கொண்டுதான் பிழைக்க வேண்டுமா?"

"ஸ்டுடியோ இல்லா விட்டால் அய்யாவாள் இப்படிப் பணத்தை எங்கே காண்பது? கூத்தடிப்பது எப்படி? பேச்சுக்கு ஜம்பமாகப் பேசலாம்."

"அவர் ஜம்பம் பேசுவது இருக்கட்டும். முதலில் அவர் ஸ்டுடியோ வைத்திரா விட்டால் நீங்கள் தான் இப்படிப் பிரபல டைரெக்டராக ஆகியிருக்க முடியுமா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்."

"என்னத்தை யோசித்துப் பார்ப்பது? இவன் இல்லை யென்றால் வேறு எவனாவது செய்திருப்பான், அவ்வளவு எதற்கு? இன்று பாரேன். இரண்டு மூன்று ஸ்டுடியோக்காரர்கள் என்னை 'என் கம்பெனிக்கு வா, உன் கம்பெனிக்கு வா' என்று பிய்த்து இழுக்கிறார்கள். எவன் லாபத்தில் அதிக பங்கு கொடுக்கிறானோ அவனிடம் தான் நான் வேலைக்குப் போகப் போகிறேன்."

"இப்பொழுது தானே தெரிகிறது விஷயம். டைரெக்டர் அய்யா பிரபலமடைந்து விட்டார். அவரை தம் கம்பெனியில் சேர்த்துக் கொண்டால் கொள்ளை லாபம் அடிக்கலாம் என்ற எண்ணத்தில் இவர்கள் எல்லோரும் சூழ்ச்சி செய்து உங்கள் மனதை மாற்றி யிருக்கிறார்கள். இந்த மடையன்கள் நீங்கள் வேலைக்கு அலைந்து கொண்டிருந்த போது எங்கே இருந்தார்கள்?"

"அவர்கள் அப்பொழுது எங்கிருந்தால் என்ன உனக்கு? இன்று அவர்கள் என்னை வருந்தி அழைக்கிறார்கள். அது தானே முக்கியம்?"

"ஆமாம், ரொம்ப முக்கியம்! பாவம்! அந்த மனிதன் உங்களை முன்னுக்குக் கொண்டுவர பணத்தை வாரியிறைத்து கஷ்டப்பட்டான். ஆனால் அவன் இப்பொழுது உங்கள் விரோதி! இந்த வஞ்சகர்கள் இப்பொழுது உங்கள் நண்பர்கள்!"

"உனக்கு இந்த அடிமை புத்தி இன்னும் போகவில்லை, நல்லபடியாக ஒரு கம்பெனியில் பாகஸ்தனாகப் போவது உனக்குப் பிடிக்கவில்லை. இதற்கு நான் என்ன செய்வது?"

"அடிமைப் புத்தியோ; சுதந்திர உணர்ச்சியோ எனக்குத் தெரியாது. ஆனால் இம்மாதிரி கேட்பார் பேச்சைக் கேட்டுக் கொண்டு நல்ல சிநேகிதத்தை மாத்திரம் விட வேண்டாம் என்றுதான் சொல்வேன்" என்றாள் மல்லிகா.

"நான் என்ன சின்னக் குழந்தை—கேட்பார் பேச்சைக் கேட்டுக் கெட்டுப் போக! சரி, சரி போ, உன்னிடம் இதைச் சொல்ல வந்தேனே" என்று மிகுந்த சலிப்புடன் சொன்னார் குமார்.

மல்லிகா சோபாவை விட்டு எழுந்து நின்று "நான் போகிறேன். எனக்கும் வேலை இருக்கிறது. நீங்கள் செய்தது சரிதானா என்று நீங்களே நன்



றாக யோசித்துப் பாருங்கள்" என்று சொல்லி விட்டு மளமள வென்று ஹாலிலிருந்து உள்ளே சென்று விட்டாள்.

குமார் சிந்தனையில் மூழ்கினார். தாம் செய்தது 'சரி' என்று முதலில் நினைத்திருந்தாலும் மனைவி சொன்னதனால் அதைப் பற்றி திரும்பவும் யோசித்தார். அவர் சிந்தனையில் நாதன் அவனை மோசம் செய்து, எலும்பொடிய வேலை வாங்கி பணத்தைக் கொள்ளையடிப்பதாகவே பட்டது. "இல்லையென்றால் என் பங்கு கொடுக்கக் கூடாது!" என்றும் கேள்விபிறந்தது. இதனால்தாம்செய்தது

(தொடர்ச்சி 63 -ம் பக்கத்தில்)



ஜெமினியைக் கேளுங்கள்

எம். ஆரோக்கியசாமி பிள்ளை (ஜலகண்டபுரம்)

டி. பி. ராஜலக்ஷ்மி நடித்த சத்தியவான் சாவித்திரி படம் எந்த வருஷத்தில் வெளிவந்தது?

இப்படம் 1932-ம் வருஷத்தில் வெளிவந்தது.

சா. வெ. சாமி (ஆனைமலை)

கன்னிகாவில் நடித்த டி. ஈ. வரதன் அதன் பிறகு ஏதேனும் படங்களில் நடித்திருக்கிறாரா?

பக்ஷிராஜாவின் "பவளக்கொடி" விளம்பரம் ஒன்றைக்கூட நீர் பார்க்கவில்லை என்று நான் சொல்கிறேன்; உண்மைதானே?

ஏ. நாராயணன் (பட்டிவீரன்பட்டி)

எஸ். வரலக்ஷ்மியும், பி. எஸ். கோவிந்தனும் ரிஜிஸ்டர் கலியாணம் செய்து கொண்டிருக்கிறார்களாமே? உண்மையாகவா?

முழுதும் தவறு. இரண்டு படங்களில் அவர்கள் சேர்ந்து நடித்தது இது போன்ற எண்ணங்களைக் கிளப்பி விட்டுள்ளன; அவ்வளவுதான்.

எஸ். ஏ. பாலு (ஊர்சேரி)

டி. ஆர். ராமச்சந்திரன் நடிக்கும் போதெல்லாம் ஏன் வலிப்பு வந்தவரைப் போல் அனத்துகிறார்?

அது ஒரு "காமிக் வியாதி" என்பது உமக்குத் தெரியாதா? அடேயப்பா, மோசமான ஒட்டுவாரொட்டி அது!

எம். ஆர். கணேசன் (மதுரை)

என். ஸி. வஸந்தகோகிலம், என். ஏ. சுந்தரம் இவர்களுள் பாட்டிலும் அழகிலும் சிறந்தவர் யார்?

பாட்டில் வஸந்த கோகிலத்திற்கு முதல் ஸ்தானத்தை அளியும். ஆனால் அழகைப்பற்றிப் பேசும்போது என். ஸி. வி. யின் பெயரை உச்சரிப்பது கூடத் தவறு.

ஏ. எஸ். ஈ. முகம்மது பாயி (வடகரை)

பக்த சேதா, காமதேனு ஆகிய படங்களில் நடித்த ஜி. சுப்புலக்ஷ்மி தற்போது எந்தப்படத்தில் நடிக்கிறார்?

சுப்புலக்ஷ்மியை எந்தப் படமுதலாளியாவது மீண்டும் நடிக்கச் செய்ய முயல்வதற்குப் பதில் அவரது தாயாரை ஒரு பட டைரெக்டராக ஆக்கிவிட்டால் இரட்டைப் பிரயோசனம் ஏற்படும். சுப்புலக்ஷ்மியை (வீட்டில்) டைரெக்ட் செய்வதில் அவருக்கு நல்ல அநுபவம்! அவரது தகப்பனாரை வேண்டுமானாலும் அஸிஸ்டென்ட் டைரெக்டராகப் போட்டுக் கொள்ளலாம். இப்படிச் செய்து விட்டால் அவர்களுக்கு சினிமா உலகைப் பற்றிப் புகார் சொல்லிக் கொண்டிருப்பதற்கும் இடமில்லாமல் போய்விடும்.

ஏ. பீ. ஸ்வாமி (சிதம்பரம்)

லலிதா-பத்மினி நாட்டியக் கச்சேரி ஒன்றிற்கு எவ்வளவு பணம் தேவை?

அவர்கள் "எவ்வளவு" கொடுத்தாலும் வாங்கிக் கொள்ளுவார்கள்!

பொ. முருகேசு (தைப்பிங்)

சில தமிழ்ப் படங்களில் சில நடிக நடிகைகள், ஆரம்பம் முதல் கடைசி

வரையில் ஒரே ஆடையுடன் காட்சி அளிக்கிறார்கள். வேறு சில நடிகநடிகைகளோ நித்திரைக்குச் செல்லும்போது கூட தங்கள் ஆடை, ஆபரண அலங்காரங்களைக் களைவதில்லை. இவையெல்லாம் பொருத்தமற்றவைதானே?

இதையாவது ஒருவாறு சகித்துக் கொள்ளலாம். சில படங்களில் ஆடை ஆபாரணங்கள், திடீர் திடீரென்று மாறுகின்றனவே அதற்கென்ன சொல்லுகிறீர்?

எம். கே. நாகராஜன் (சித்தலவாய்)

டி. ஆர். ராஜகுமாரி ஏன் தம் காதுகளை தலைமயிரால் மூடிக்கொள்ளுகிறார்?

ரஸிகர்கள் அவரைப் பற்றிப் பேசும் விஷயங்களை அவர் காதில் போட்டுக்கொள்ள விரும்பவில்லை போலும்!

கே. கே. பெருமாள் (பாலூர்)

யூ. ஆர். ஜீவரத்தினம் தற்போது எந்தப் படத்தில் நடித்துவருகிறார்?

அவர் தம் "ஜீவிய-ரத்தின"த்துடன் கொஞ்சிக் குலவிக் கொண்டிருப்பதற்கு இடையூறு விளைவிக்க தம் பட முதலாளிகள் யாரும் விரும்பவில்லை போலும்!

கே. ஸி. கே. (கும்பகோணம்)

ஒரு படத்தைத் தயாரிப்பதற்கு சாதாரணமாக ஆறேழு லக்ஷம் ரூபாய்கள் செலவாகிறதாகச் சொல்கிறார்களே; உண்மையில் இவ்வளவு செலவாகிறதா? இல்லையென்றால், ஒரு படத்திற்கு அவசியமான செலவு எவ்வளவு ரூபாய்?

ஒரு படத்தை ஆரம்பிப்பதற்கான எண்ணம் படமுதலாளியின் மனதில் உதயமானது முதல், அவர் பையிலிருந்து செலவாகும் தொகை பூராவும் படத்தின் செலவாகவே சொல்லப்படுகிறது. இதில், அவருடைய ஆசை நாயகிகளுக்கு பூ முதல் பங்களாவரை வாங்கிக் கொடுத்த சகல செலவுகளும், வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் எல்லோரையும் வைத்துக்கொண்டு கொம்மாளம்



நடிப்புத் திறமைக்குப் பெயர்பெற்ற நாகய்யா, கண்ணாம்பா, எல். நாராயண ராவ் ஆகிய மும்மணிகளும் "தவஜீவனம்" தமிழ் சமூகப் படத்தில் தோன்றுகின்றனர்.

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பில்ம்ஸாரின் "நவஜீவனம்" தமிழ் சமூகப் படத்தில் கணேசனும், குமாரி துளஸியும் இவ்விதம் ஒரு காட்சியில் தோன்றுகின்றனர்.

அடித்த செலவுகளும் அடங்கியிருக்கும். ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டிருந்தவனை ஐம்பதனாயிரம் கொடுத்து ஒப்பந்தம் செய்து கொள்ளுவதாலும், நான்கே மாதத்தில் முடிக்கக் கூடிய படத்தை நாலு வருஷத்தில் தயாரிப்பதாலும், மற்றும் அநுபவமின்மையால் ஏற்படும் முட்டாள்தனத்தாலும் படச் செலவுகள் ஏராளமாய் ஆகிவிடுகின்றன. இக்காரணங்களால்தான் கோடீஸ்வரர்கள்கூட படம் தயாரிக்க வந்தால் மண்ணைக் கவ்வி மடிகிறார்கள். படச் செலவு லக்ஷக்கணக்கில் உயர்ந்திருக்கிறதே தவிர, படங்களின் தரம் ஒரு அக்ஷரம் கூட முன்னேறாததும் இதனால்தான். நியாயமான முறையில் படம் தயாரிப்பதானால் இப்பொழுதுகூட மூன்று லக்ஷ ரூபாய்க்குள் ஒரு முதல் தரப் படத்தைத் தாராளமாய் தயாரிக்க முடியும்.

எஸ். அப்துல் ரஷீத் (சென்னை)

ஒரே மனிதனை இரு வேஷங்களில் எப்படி நடிக்க வைக்கிறார்கள்?

ரொம்பவும் சுலபமாயிற்றே! ஒருவனுக்குக் கடன் கொடுத்துவிட்டு அதை கேட்டுப் பாரும்; உமக்கே தெரியும்! ஆனால் சினிமாவில் இதைச் சாதிப்பதென்னவோ கஷ்டமான காரியம்தான். கெமிராவின் பூதக்கண்ணாடியை பாதி பாதியாய் மறைத்துவிட்டு, இரண்டு வேஷங்களையும் தனித்தனியாகப் படமெடுத்து, பின் ஒன்று சேர்க்கிறார்கள்.

எஸ். செல்லையா (கலனி, இலங்கை)

டி. ஆர். ராஜகுமாரியின் கணவரது பெயரைத் தெரிவிக்க முடியுமா?

ராஜகுமாரிக்கே தம் கணவரது பெயர் தெரியாது! ஏனென்றால், அவருக்கு இன்னமும் விவாஹம் ஆகவில்லை!

டி. வி. லக்ஷ்மி (கோயமுத்தூர்)

வேலைக்காரி படத்தில் ஆனந்தன் வடநாட்டு வக்கீலாக வேஷம் மாறி கோர்ட்டாரை ஏமாற்றி வாதம் செய்கிறாரே? சன்னது இல்லாமல் யார் வேண்டுமானாலும் வக்கீலாக ஆஜராகலாமா? ஆனந்தனுக்குத்

திடீரென்று ஒரு வக்கீலைப் போல் வாதாடுவதற்கான திறமை எங்கிருந்து வந்தது? எம். ஏ. படித்த அறிஞர் அண்ணாத்துரையின் மூளைக்கு இது எட்டாமற் போனதேன்?

இதுமட்டுமா? இந்தக் கதை ஆரம்பம் முதல் கடைசிவரை ஒரே அபத்தக் களஞ்சியம். வட்டிக்குக் கடன் கொடுத்து ஊரைக் கொள்ளை யிட்டு வந்த வேதாசல முதலியாரைத் தண்டிப்பதற்காக, ஆனந்தன் ஒரு கண்ணில்லாக் கிழவியை ஏமாற்றி, அவளது மகனாக நடித்து, அவளது சொத்துகளையும் அபகரிக்கிறான். வாங்கின கடனைத் திருப்பிக் கொடுப்பதில்லை என்ற கொள்கையுடைய-பொய்ச் சத்தியம் செய்யும்-ஆப்த நண்பனின் உபதேசம் அவனுக்கு! ஒரு குற்றவாளிக்கு இன்னொரு குற்றவாளி நீதிபதியாய் அமைந்தது எவ்வளவு வேடிக்கையா யிருக்கிறது, பார்த்தீரா?

சொ. கபீர்தாஸ் (சென்னை)

நல்லதம்பியில் பானுமதி பாடுவது சொந்தக் குரலிலா, இரவல் குரலிலா?

சொந்தக் குரலிலேயேதான் அவர் பாடியிருக்கிறார்.

எம். செல்வநாதன் (சிந்துபூந்துறை)

சோகக் கட்டங்களில் பி. யு. சின்னப்பா ஒருவர்தான் மெய்மறந்து பாடுகிறார் என்பது என் அபிப்பிராயம். நீர் என்ன சொல்லுகிறீர்?

நீர் இதை யென்னவோ பிரமாதமாய்க் கருதுகிறீர். அக்டோபர் மாதத்திற்கு முன்னால் எங்கள் தெருவில் "மெய் மறந்து" பாடிக்கொண்டு சென்ற எத்தனையோ பேர்களை நான் பார்த்திருக்கிறேனே!

டி. ஆனந்தராஜ் (மதுரை)

1948-ம் வருஷத்தில் வெளி வந்துள்ள படங்களுள் எதற்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

"சந்திரலேகா"வுக்கு. அதற்கு அடுத்தபடியாக "சக்ரதாரி", "கிருஷ்ண பக்தி", ஸிடேடல் "ஞான சௌந்தரி", "பக்த ஜனா", "மோஹினி" ஆகிய படங்களைக் கூறலாம். பண வசூலை ஆதாரமாகக் கொண்டு தான் இத் தீர்மானத்தைச் சொல்லவில்லை.

எஸ். நூர்பாஷா (நாகூர்)

எம். வி. ராஜம்மாவுக்கு விவாஹம் ஆகிவிட்டதா? அவரது விலாஸம் என்ன?

உமக்கு விலாஸம் எதற்காக? உம்மிடம் ஒரு வார்த்தையும் சொல்லாமல் முன்பே கலியாணம் செய்து கொண்டிருப்பதற்காக உம் வருத்தத்தைத் தெரிவிக்க விரும்புகிறீரோ!

பி. ஆர். தனபதி (சாம்பியன் ரீப்)

நல்லதம்பியில், உண்ண உணவும், உடுக்க உடையும் வாங்க கதியற்றவர்கள் என்று காண்பிக்கப்படும் அந்த ஏழை கிராம வாசிகளுக்கு நல்ல செம்பும், புதிய பாயும் எங்கிருந்து கிடைத்தன?

எனக்குத் தெரியும்; 'என்னெஸ்கே பில்ம்ஸி'லிருந்து!

எம். பாண்டியராஜன் (போர்ட் ஸ்வீடன்ஹாம்)

என் நண்பர் எஸ். சண்முகம் ஜானகியைப் பற்றியே கனவு கண்டு

"நாம் இருவர்" புகழ் டி. ஏ. ஜெயலக்ஷ்மி "பிழைக்கும் வழி"க்குப் பின் இப்பொழுது "நவ ஜீவன"த்தில் தோன்றுகிறார்.

வருகிறார். ஆனால் ஜானகியை அவர் அடைவதற்கான மார்க்கத்தை என்னால் சொல்லமுடியவில்லை. இதற்கு நீங்கள்தான் உபாயம் சொல்லவேண்டும்.

உம் நண்பரிடம் "ஜா(வ்)-நகி" என்று சொல்லி, இந்தப் பேச்சை எடுக்க வொட்டாமல் விரட்டியடிப்பது தான் இதற்குச் சிறந்த உபாயம். ஏனென்றால், ஜானகிக்கு எப்பொழுதேயோ கலியாணம் ஆகிவிட்டது.

எம். எம். கனி (கோலகிள்ளாங்)

குண்டூசியாரே! நீர் கேள்விக்குச் சரியான பதில் சொல்லாவிடில் ஐ. நா. சபையில் வழக்குத் தொடருவேன். ஜாக்கிரதை!

பேஷ்! அவர்கள் மட்டும் கமிஷன் கிமிஷன் எல்லாம் ஏற்படுத்தி, கால தாமதம் செய்யாமல் பதில் சொல்லி விடுகிறார்களோ!

எம். ஏ. சலாம் (இளையான்குடி)

எம். வி. ராஜம்மாவை சங்கீதக் கச்சேரிக்கு அழைத்தால் வருவாரா?

"மங்கையர்க்கரசி" தமிழ்ப் படத்தில் பி. யு. சின்னப்பாவும், அஞ்சலி தேவியும்.

வரமாட்டார் சினிமாவிற்கே அவரது சங்கீதம் போதாதென்று பெரிய நாயகியின் குரலை இரவல் வாங்கியிருப்பது உமக்குத் தெரியாது போலும்?

என். எஸ். ராமய்யா (சிவகங்கை)

வி. என். ஜானகியின் சொந்த ஊர் எது?

கேரள தேசத்திலுள்ள 'வைக்கம்'.

எஸ். எம். சுந்தரம் (பாளையங்கோட்டை)

எம். கே. டி. பாகவதர் ராஜயோகியில் நடிக்கப் போகிறாரா?

நடிப்பார் என்ற நம்பிக்கை எனக்குக் கிடையாது.

பழனிச் சாமி (பொள்ளாச்சி)

நல்லதம்பியில் நடிக்கும் பானுமதி நடித்த முதல் தமிழ்ப் படம் எது? முதன் முதலில் நடித்த படம் எது?

பானுமதி முதன் முதலில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட தமிழ்ப் படம் "ரத்ன குமார்". ஆனால் வெளிவந்த முதல் தமிழ்ப் படம் "ராஜ முக்தி". அவர் முதன் முதலில் நடித்த (தெலுங்குப்) படம் "வர விக்ரயம்".

வ. மை. முஸ்தபா (இராமனாதபுரம்)

என். எஸ். கிருஷ்ணன் எதுவரையில் படித்திருக்கிறார்?

பள்ளிக்கூடத்தில் சொற்ப வகுப்புகள் தான் படித்திருக்கிறார் என்றாலும் உலக அநுபவத்தில் அவருக்கு நிறைந்த ஞானம் உண்டு.

என். எஸ். பதி (மேட்டூர்)

பக்ஷி ராஜா ஸ்டுடியோவில் இது வரை தயாரான படங்கள் எவை?

"கன்னிகா", "பவளக்கொடி" ஆகிய இரண்டு படங்கள்.

கே. பி. என். பி. (பதுளை, இலங்கை)

வேதாள உலகத்தில் ஒரு காட்டில் உள்ள ஒரு ரிஷிக்கு அணுகுண்டு எவ்விதம் கிடைத்தது? இது அர்த்தமில்லாமல் இருக்கிறதல்லவா?

ஹிட்லர், முஸோலினி போன்ற 'வேதாளங்கள் நிறைந்த உலக'த்திற்கும்

விரைவில் வெளிவர விருக்கும் பாக்யா பிக்சர்ஸின் "மங்கையர்க்கரசி" தமிழ்ப் படத்தில் அஞ்சலி உள்பட இவர்கள் நடனம் ஆடுவதெல்லாம் பி. யு. சின்னப்பாவை மட்டுமல்ல; நம்மையும்கூட ஆனந்தம் அடையச் செய்வதற்காகந்தான்.

அணுகுண்டிற்கும் சம்பந்தம் ஏற்பட்டிருப்பதால், மெய்யப்பன் தம் 'வேதாள உலக'த்திற்கும் அணுகுண்டிற்கும் கூட சம்பந்தம் இருப்பது பொருந்தும் என்று சேர்த்திருப்பார் போலிருக்கிறது!

ஏ. பாஷா (வெள்ளையூர்)

சினிமா நக்ஷத்திரங்கள் மண வாழ்க்கையை விரும்பாத காரணம் என்ன?

நீர் நினைப்பது தவறு. இப்பொழுது தான் நம் சினிமா நக்ஷத்திரங்களில் அநேகர் மனைவிமார்களாகவும் தாய்மார்களாகவும் மாறி வருகிறார்களே.

எல். கெ. சுப்பய்யா (நிலக்கோட்டை)

ராஜா செங்கல்வராயன் நடிப்பதாக விளம்பரப் படுத்தப்பட்ட "நேதாஜி சுபாஷ்" வாழ்க்கைப் படம் எப்பொழுது வெளிவரும்?

நேதாஜி திரும்ப வருவது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயம் இப் படம் வெளிவருவதும்.

பவுடன் (கொழும்பு)

சினிமாப் படங்களைப் பார்த்துப் பார்த்து எனக்குப் பைத்தியம்பிடித்து விட்டது. ஆதலால் ஒரு சினிமாக் கம்பெனியில் சேர விரும்புகிறேன்.

நம் தமிழ்ப்படங்களில் பல, பைத்தியக்காரத் தனமாயிருப்பதால் பைத்தியம் பிடித்தவர்களுக்கு சினிமா உலகில் நிறைய இடம் உண்டு என்று நீர் நினைத்தது தவறு!

ஜி. எஸ். தங்கராஜ் (கோவிலாம்பூண்டி)

எம். கே. டி. பாகவதரும், என். எஸ். கிருஷ்ணனும் விடுதலையான பின்னர் ஏன் சேர்ந்து படங்களில் நடிக்கவில்லை?

விடுதலையான பின்னர் அவர்கள் தனித் தனியாகப் படமுதலாளிகள் ஆகிவிட்டார்கள். நம் படமுதலாளிகளிடையே ஒத்துழைப்பு கிடையாது என்ற விஷயம்தான் மிகப் பிரசித்தமாயிற்றே!

ஈ. எஸ். சாந்தா (குன்னத்தூர்)

கண்ணாம்பா சின்னப்பாவை மணந்து கொண்டிருக்கிறாரா? கண்ணாம்பா என்ன ஜாதியைச் சேர்ந்தவர்?

சின்னப்பா கண்ணாம்பாவின் கணவராக இரண்டு மூன்று படங்களில் நடித்திருக்கிறார்; அவ்வளவுதான். நாயுடு ஜாதியைச் சேர்ந்த கண்ணாம்பா டைரெக்டர் நாகபூஷணத்தின் மனைவியாக விளங்குகிறார்.

வி. ப்ா. (சின்னமனூர்)

மோஹினியில் வரும் குதிரை என்ன தீனி தின்கிறது?

"சந்திரலேகா"வில் வரும் 'நாட்டியக் குதிரை' என்ன தீனி தின்கிறதோ அதே தீனிதான் என்று நினைக்கிறேன்!

கே. சு. ராஜன் (பவானி)

யு. ஆர். ஜீவரத்தினத்திற்கு "இசைக் குயில்" என்ற பட்டத்தை யார் அளித்தது?

அவர் ஒரு முறை திருவாரூரில் மேடை மீது தோன்றி பாட்டுப் பாடியபோது கிணகர் சுவாமிகளால் அப்பட்டம் வழங்கப்பட்டதாம்.

வி. என். சச்சிதானந்தன் (ராபர்ட்சன்பேட்டை)

தாய் நாடு தமிழ்ப் படத்தில் பகதூர் மாநதி சிப்பாய்களைப் பார்த்து, சிலரை கிழக்கேயும், சிலரை மேற்கேயும், சிலரை தெற்கேயும், சிலரை வடக்கேயும் போகும்படி உத்தரவிடுகிறார். ஆனால் அவர்கள் எல்லோரும் ஒரே கும்பலாகச் செல்லுகிறார்களே?

சென்னை ஸென்ட்ரல் ஸ்டேஷனில் எல்லா ஊருக்கும் ஒரே திக்கை நோக்கித்தானே ரயில்கள் புறப்படுகின்றன! அதுபோல அவர்கள் ஒரே திக்கில் சென்று விட்டுப் பிறகு பிரிந்து போவார்கள் என்று வைத்துக் கொள்ளுமேன்.

"கனகாங்கி" படத்தில் நடித்துவிட்டு குமாரி சுப்புலக்ஷ்மி பம்பாய் ரூபகலா கேந்திரத்தில் சென்ற மாதம் 14-ந் தேதியன்று ஒரு நடன விருந்தளித்தார்.

வி. சின்னப்பன் (ரஜௌரி, காஷ்மீர்)

புஷ்பவல்லியின் தங்கை சூர்யப்ரபா இப்பொழுது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

அவர் சீக்கிரமே ஜெமினி படம் ஒன்றில் நடிப்பார் என்று தோன்றுகிறது.

த. இராதாகிருஷ்ணன் (மயூரம்)

காளி என். ரத்தினத்தின் விலாஸத்தைக் கட்டாயம் தெரிவிக்கவும்.

c/o ஆர்கேயஸ் பிக்சர்ஸ், தியாகராய நகர், சென்னை-17.

மு. நாராயணன் (பங்களூர்)

லலிதா-பத்மினி இவர்களது தாய் பாஷை எதுவோ?

அவரது தாயாரும் மலையாளம்தான் பேசுகிறார், ஸ்வாமி!

வி. கிருஷ்ணமூர்த்தி (ஆம்பூர்)

தங்களுக்கு நடிகர்கள், படமுதலாளிகள் இவர்களின் ஒத்துழைப்பு அவ

சியமா? அல்லது என்போன்ற நேயர்களின் ஒத்துழைப்பு அவசியமா?

சினிமாப் பத்திரிகை வெற்றிகரமாய் நடைபெற வேண்டுமானால் அனைவருடைய ஒத்துழைப்பும் அவசியமாகும்.

வி. மாரியப்பன் பிள்ளை (ஓலவக்கோடு)

என். எஸ். கிருஷ்ணன் அடுத்தபடியாக சொந்தத்தில் தயாரிக்கப் போகும் படம் எது?

ஆசிரியர் "கல்கி"யின் பிரபல நாவலான "கள்வனின் காதலி" கதையைப் படமாகத் தயாரிக்கப் போகிறார் கிருஷ்ணன்.

கே. ராமசாமி (அருப்புக்கோட்டை)

நவஜீவனம் படத்தை டைரெக்ட் செய்தவர் யார்?

டைரெக்டர் கே. நாகபூஷணம்.

"கற்பனை" (சத்தியமங்கலம்)

ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணியின் நீளம் எத்தனை?

"பத்து பாயின்டில் கம்போஸ் செய்தால் 2½ அங்குல நீளம்; 14 பாயின்டில் 3½ அங்குலம்; 24 பாயின்டில் கம்போஸ் செய்தால் 6 அங்குல நீளம்" என்று கம்பாஸிட்டர் கோவிந்தன் கூறுகிறார்.

ஏ. ஷெரீப் (கொழும்பு)

என் கணவரில் நடிக்கும் டி. கே. பட்டம்மாளும், சங்கீதம் பாடும் டி. கே. பட்டம்மாளும் ஒரே நபர்தானா?

பாடுபவர் D. K. பட்டம்மாள்; இவர் (நடனம்) ஆடும் T. K. பட்டம்மாள்.

கண்ணன் (தூத்துக்குடி)

ஆர். பி. லக்ஷ்மிதேவியின் சொந்தப் பெயர் என்ன? அவர் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்? தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்? விலாஸம் என்ன?

லக்ஷ்மிதேவியின் சொந்தப் பெயரும் லக்ஷ்மி தேவிதான். வேளாள ஜாதியைச் சேர்ந்த அவர் சினிமா உலகிலிருந்து விலகி சில வருஷங்களாகின்றன. விலகும்போது விலாஸத்தைத் தெரிவித்து விட்டு விலகும் 'நல்ல' குணம்தான் நம் நக்ஷத்திரங்களிடம் கிடையாதே!

பி. லோகநாதன் (பங்களூர்)

வேலைக்காரி பாட்டுப் புஸ்தகத்தில் உள்ள இரண்டு பாட்டுகள் படத்தில் காணப்படாததேன்?

இது போலவேதான் இன்னொரு நேயர் திருவண்ணாமலையில் தாம் இப்படத்தை பார்த்தபோது, "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற பாட்டு நீக்கப் பட்டிருந்ததாகக் கூறுகிறார்.

கே. பி. முகம்மது அலி (பினாங்கு)

எஸ். டி. சுப்புலக்ஷ்மியின் குழந்தைக்காக நான் சில விளையாட்டுச் சாமான்களை வாங்கி வைத்திருக்கிறேன். அவற்றை அனுப்பினால் ஏற்றுக் கொள்ளுவாரா? எனக்கு அவரது குழந்தையின் போட்டோ ஒன்றையும் கொடுப்பாரா?

"நீங்கள் அனுப்பும் பொம்மைகளை எஸ். டி. எஸ். தம் குழந்தைக்குக்

விரைவிலேயே தமிழ் பேசப்போகும் "ரக்ஷ ரேகா" (தெலுங்குப்) படத்தில் அஞ்சலி தேவியும், நாகேஸ்வர ராவும்.

"பவளக்கொடி" கதையை கிருஷ்ணன் (மஹாலிங்கம்) ருக்மணி (ஹரிணி)க்கு சொல்லுகிருர்.

கொடுக்காமல் தாமே வைத்துக் கொண்டு விளையாடக்கூடாது" என்ற நிபந்தனையை நீர் ஏற்படுத்தாமலிருந்தால் அவர் ஏற்றுக் கொள்ளக்கூடும். அவருக்கு தற்போது சினிமா வேலையே யில்லாமலிருக்கிறது; அதற்காகச் சொன்னேன். நீங்கள் இவ்வளவு பிரியமாய் கேட்கும்போது தம் குழந்தையின் போட்டோதாஞ அவருக்குப் பிரமாதம்!

எஸ். செல்லய்யா (பெரிய பொட்டல்பட்டி)

குண்டூசியாரே! கடைசி முறையாகக் கேட்கிறேன். சந்திரலேகாவில் பார் விளையாடுபவர் ராஜ குமாரியே தாஞ?

நானும் உமக்குக் கடைசி முறையாகக் கூறுகிறேன்: "குண்டூசி"யை நீர் சரிவரக் கவனித்துப் படிக்காமல், திரும்பத்திரும்ப நான் பதில் சொல்லி விட்ட கேள்விகளையே கேட்டுக் கொண்டிருக்க வேண்டாம்-என்று. ராஜகுமாரி ஆடவில்லை என்று முன்பே பதில் கூறியிருக்கிறேன்.

கே. மாணிக்கம் (சிதம்பரம்)

எஸ். டி. சுப்பு லக்ஷ்மியும், எம். எஸ். சுப்பு லக்ஷ்மியும் ஏன் சினிமாவில் நடிப்பதை நிறுத்தி விட்டனர்?

இந்த சுப்பு லக்ஷ்மிகள், ஜி. சுப்பு லக்ஷ்மி காட்டிய வழியில் சென்று விட்டதால், சினிமா உலகில் "சுப்பு லக்ஷ்மி யுகம்" முடிவடைந்து விட்டதாகத் தோன்றுகிறது.

"கோபம்" (தியாகராய நகர்)

நம் தமிழ்ப் படங்களில், நடிக நடிகைகள் அழும் போது இனிமையாகப் பாடுகிருர்களே? இதைப் பற்றி நீர் என்ன சொல்லுகிறீர்?

இதைப் பற்றி பிரமாதமாய்க் கேட்க வந்து விட்டீரே? சில நடிக நடிகைகள் பாடும் போது (கடுமையாக) அழுது தீர்க்கிருர்களே? அதற்கு நீர் என்ன சொல்லுகிறீரோ?

எம். பஹாரி (கொழும்பு)

டி. ஏ. மதுரத்தினுடைய சொந்தக் கணவர் யார்?

இது தெரியாதா உமக்கு! மதுரத்தின் சொந்த-கணவர்-என். எஸ். கிருஷ்ணன்!

கே. பி. செல்லையாக்கோன் (மதுரை)

டி. ஈ. வரதன் என்ன ஜாதியைச் சேர்ந்தவர்?

வைஷ்ணவ பிராமண ஜாதியைச் சேர்ந்தவர்.

பி. எம். முத்து (தாமரைக்குளம்)

எம். வி. ராஜம்மா நடித்த முதல் படம் எது?

கன்னட "சம்ஸார நௌகா."

வே. ஸ்ரீனு (கோயமுத்தூர்)

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் பேசும் படம் எது?

"ஆலம் ஆரா" என்ற ஹிந்திப் படம். அது பம்பாய் இம்பீரியல் பிலிம் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டதாகும்.

இந்த ஹாஸ்யத் தம்பதிகளின் கோமாளிக் கூத்தை "ரக்ஷ ரேகா" தெலுங்குப் படத்தில் நாம் கண்டு களிக்கலாம்.

பாக்யா பிக்சர்ஸாரின் "மங்கையர்க்கரசி"யில் கண்ணாம்பாவுக்கு நடிப்பதற்கு நிறைய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறதாம்.

பானுமதி எந்த வேஷம் போட்டாலும் ரஸிகர்கள் மனங்களைப் பறிக்கத் தவறுவதில்லை. "ரக்ஷ ரேகா"வில் இம்மாதிரி நடிக்கிறார்.



நவஜீவனம்



சிவயோகி

லைலா மஜ்னு


நவஜீவனம்

ஆதித்தனுக்கு மட்டுமென்றி பட ரஸிகர்களுக்கும் கனவை உண்டு பண்ணிய அஞ்சலி தேவி இப்படி "மங்கையர்க்கரசி"யில் ஆடுகிறார்.

பிரபல நடிகை கண்ணும்பா முதல்
தடவையாக "நவ ஜீவனம்"
தமிழ் சமூகப் படத்தில் பிரபல நடி
கர் வி. நாகய்யாவுடன் நடிக்கிருர்.

பிரபாகரை எப்படித் தன் வலையில் விழ
வைக்கலாம் என்று யோசிக்கிறாள் வனஜா.
(டி. ஏ. ஜெயலக்ஷ்மி — நவ ஜீவனம்).

* ஒரு யோசனை

சென்னை மாகாணத்தில் அநேக பள்ளிக்கூடங்கள் இருந்தும், புதியவையாக பல தோன்றிக் கொண்டிருந்தும் வருஷா வருஷம் இடமில்லாத் திண்டாட்டம் மாத்திரம் குறைந்தபாடில்லை. இதற்கு ஒரு உபாயம் செய்யலாம் என்று நினைக்கிறேன்.

மாகாணத்தில் பல சினிமா கொட்டகைகள் இருக்கின்றன. அவைகள் மாலைக் காட்சி வரை சும்மாத்தான் மூடப்பட்டுக் கிடக்கின்றன. அவைகளில் படம் காட்டும் நேரம் வரை வகுப்புகளை நடத்தலாம். அப்படிச் செய்வதால் செலவு கூட மிச்சமாகும். ஆனால் இதைச் சர்க்கார் தான் கவனிக்க வேண்டும்.

மாகாணத்தில் கல்வியறிவை வளர்க்கப் பாடுபடும் சர்க்காரும் பொது நல ஊழியர்களும் இதைக் கவனித்து ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன்.

ஆர். ராமநாதன்,

குகை, சேலம்.

முதலில் செய்யவேண்டியவை

கிராமங்களின் முன்னேற்றத்தில் சர்க்கார் கண்ணும் கருத்துமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது சந்தோஷப்பட வேண்டிய விஷயமே. இதற்கு சினிமாவை நன்கு பயன்படுத்தலாம் என்றும் சொல்கின்றனர். சினிமா ஒரு அறிய சாதனம் என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் முதலில் சர்க்காரும், பிலிம் சேம்பரும் இதைச் செய்ய வேண்டும்.

கிராமத்தில் ஏழை மக்கள் யாவரும் பார்க்கும்படி சினிமாவின் கட்டணத்தை குறைக்க வேண்டும். படங்கள் நல்ல கருத்துக்கள் கொண்டதாகவும், கிராம மக்களுக்குப் பயன்படுவதாகவும் இருக்க வேண்டும். செய்திப் படங்களை அதிகமாகக் காட்ட வேண்டும். அவைகளை நேரம் கழித்து வருவோரும் பார்க்கும் வகையில் இடைவேளைக்குப் பின் காட்டினால் நல்லது. அத்துடன் படத்தின் பழைய பிரதிகளை பட முதலாளிகள் அனுப்புகிறார்களே, அப்படி இல்லாமல் நல்லதாகவும், புதியதாகவும் உள்ளதை அனுப்ப வேண்டும்

இவைகளைச் சம்பந்தப்பட்டவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

எம். எம். ராஜா,

கொடை ரோடு.

கலைஞர்களை அறிமுகப்படுத்துங்கள்

ஒரு நல்ல படம்; ரஸிகர்கள் அன்பையும் ஆதரவையும் அமோகமாகப் பெற்ற படம். வெற்றிகரமாக ஓடுகிற படம். சினிமா உலகிலே புரட்சியை உண்டாக்கிய படம். லக்ஷக் கணக்காக நடிக நக்ஷத்திரங்களையும், குட்டி நடிகையர்களையும் அறிமுகப் படுத்திய படம் ஓடுகிறது. அதைக் காண்கிறோம். நம் கவலை நீங்குகிறது. அதில் உள்ள கதை வசனத்தை கேட்டவுடன், பசியும் பறந்து போகிறது. பாட்டின் பொருளையும், கருத்தையும் அறிந்து மனம் மகிழ்கிறோம். தந்திரமாக நாம் ஏமாறுகிறோம் — அதில் வரும் தந்திரக் காட்சியைக் கண்டு. கலையுணர்ச்சி கருத்தோடு மிளிர்கிறது. அதைக் காணும் கலைஞர்கள் கண்ணுக்கு அது இன்பமாயிருக்கும். மேக்கப் பார்த்த படத்தில் எல்லாவற்றையும் விட இதில் நன்றாக இருக்கிறது. தேவலோக ஊர்வசியோ ரம்பையோ எனும் படியாக இருக்கிறது பெண்களின் தோற்றம். காட்சிகளை தொடர்ச்சியாக, கதையைக் கோர்வையாகக் காட்டும்படி செய்யும் எடிட்டர் செய்யும் வேலை இந்திரனாலும் முடியாதபடி அவ்வளவு அருமையாக இருக்கிறது. நடனம். ஆஹா! அபாரம் போங்க, ஸார். டைரெக்

ஷனே பூர்ண வெற்றி, ஸார்" என்று கூறுகிறோம். இதில் கூறிய இத்தனையும் செய்த அந்த அறிவும், ஆற்றலும் ஒருங்கே அமைந்த கலைஞர்கள் திரையிலே காட்டப்படுவதில்லை. அவர்களைப் படத்தில் காட்டுவதால் படத்தின் நீளம் அதிகமாகிவிடுமா? திரையிலே அவர்களைக் காட்டுவதன் மூலம் அவர்கள் புகழ் திக்கெட்டும் பரவும். ரஸிகர்களுக்கு அறிமுகம் ஆவார்கள். நேரில் காண இயலாதவர்கள் பட வெற்றியின் மூலகர்த்தாக்களைத் திரையிலே கண்டு ஆனந்திக்கக் கூடும். பட கர்த்தாக்களைக் காட்டுவதுடன் படம் தயாரிக்கப் பட்ட ஸ்டுடியோக்களையும் காட்டுதல் நல்லது.

"மாமல்லன்"

பொள்ளாச்சி.

அசுத்தம் செய்வதை தடை செய்யுங்கள்

தியேட்டர்களில் புகை பிடிப்பதை பம்பாய் சர்க்கார் தடை செய்திருக்கின்றனர். அம்மாதிரியே ஒரு வேளை சென்னை மாகாணத்திலும் சட்டம் வரலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அதுவும் ஓர் நல்ல யோசனைதான். ஆனால் எல்லாவற்றையும் விட நம் தியேட்டர்களில் கண்டிக்கக் கூடியவை யாதெனில், நம்மிடம் வெற்றிலை பாக்குப் போடுவது வழக்கத்தில் இருந்து வருகிறது. அது ஒரு வகையிலும் தேகத்திற்குக் கெடுதியில்லை. எனினும், அதே வழக்கத்தை, தியேட்டரில் போட்டுக் கொண்டு அதற்கென ஏற்பட்ட தொட்டிகளில் எச்சிலை துப்பாமல் நாற்காலி பெஞ்சுக் கடியிலும், ஜனங்கள் போகும் பாதைகளிலும் உமிழ்ந்து விடுகிறார்கள். இதனால் சுகாதாரக் குறைவு ஏற்படுகிறது. தரையும் அசுத்தமாகிறது.

புகை பிடிப்பதைத் தடை செய்வது போல் இம்மாதிரி தியேட்டரை அசுத்தம் செய்வதையும் தடை செய்ய வேண்டும். பொது ஜனங்களும் இம்மாதிரி செய்வதை சட்டம் வருமுன் திருத்திக்கொள்ள வேண்டும்.

என். தம்புராஜ்,

தூத்துக்குடி.

*பரிசு பெற்ற கடிதம்

★

எழுதியவர்:

ஆர். ராமனாதன்,

குகை,

சேலம் ஜில்லா.

நடிப்பே முக்கியம்

புகழ் பெற்ற நடிக-நடிகை நடித்துவிட்டால் மாத்திரம் படம் வெற்றியடையாது என்பதை சமீபத்தில் வெளியான சில படங்களின் மூலம் பட முதலாளிகள் அறிந்து கொண்டிருப்பார்கள். இதைப் போலவே ஊர் பேர் தெரியாத, ஆனால் நன்றாய் நடிக்கும் திறமையுடையவர்கள் நடித்த சில படங்கள் வெற்றிகரமாக சமீபத்தில் ஓடியதையும் அவர்கள் பார்த்திருக்கிறார்கள். இதன் மூலம் ரஸிகர்கள் திறம் பெற்ற நல்ல நடிப்பை விரும்புகிறார்களே தவிர புகழ் பெற்ற நடிக-நடிகையர்களின் பெயர்களை விரும்பவில்லை என்பதைத் தெரிந்து கொண்டு இருப்பார்கள்.

இனிமேலாவது பட முதலாளிகள் கருத்து மிகுந்த கதைகளைப் பொறுக்கி எடுத்து, நல்ல முறையில் வசனம் அமைத்து, நடிகர்களை நன்கு நடிக்கச் செய்து படமெடுத்து, ரஸிகர்களின் நன்மதிப்பிற்கு பாத்திரமாவார்கள் என்று நம்புகிறேன்.

சிவம்,

பெங்களூர்.

ரஸிகர்களின் ஆவல்

நடிகர்களையும், நடிகைகளையும் திரைப் படத்திலே கண்டு களிக்கிறோம். இது மாத்திரமன்றி பட ஆரம்பத்திலே அவர்களது பெயர்களைக் காட்டும் போது உருவங்களையும் காட்டும் புதியதொரு முறையை டைரெக்டர் சுப்ரமண்யம் தமது 'கீத காந்தி'யில் புகுத்தியிருக்கிறார். இது மிகவும் மெச்சத் தகுந்த முறை. ஆனால் இது மாத்திரம் போதாது.

இன்று படங்கள் வளர டைரெக்டர்களின் தொகையும் வளர்ந்து வருகிறது. இந்த டைரெக்டர்களை நேரிலே காண வேண்டும் என்றொரு விருப்பம் எழுவதும் இயல்பே ஆனால், நேரில் சென்று காண்பது எல்லோருக்கும் முடியக் கூடியதா? பட ஆரம்பத்திலே டைரெக்டரின் பெயரைக் காட்டுகையில் அவரது உருவத்தையும் காட்டுவது நல்லதொரு முறையல்லவா? இம்முறையை ஒட்டி ரஸிகர்கள் ஆவல் பூர்த்தி ஆவது

டன் கலைஞர்களின் புகழும் மேலும் பரவும்.

ஜெ. எம். சாலிஹ்,

எரவாஞ்சேரி.

கீழ் வகுப்புகளின் நிலைமை மாற வேண்டும்

மதராஸில் ஒரு சில தியேட்டர்களிலே தான் எல்லா வகுப்புகளிலும் சௌகரியமாக உட்கார நாற்காலிகளை அமைத்திருக்கின்றனர். அநேக தியேட்டர்களில் 15 அணுவுக்குக் கீழ்பட்ட வகுப்புகளில் பெஞ்சியில் தான் உட்கார வேண்டும். ஒரு வகுப்பில் தாராளமாக சுமார் 100 பேர்தான் கஷ்டமில்லாமல் வசதியுடன் உட்கார முடியும். எனினும், அவ்வகுப்பின் 'அகாமடேஷன்' 150 பேர்கள் என்று குறிப்பிட்டிருப்பதால் அவ்வகுப்பில் உட்காருபவர்கள் இந்த வெய்யில் காலத்தில் ஒருவர் மேல் ஒருவர் இடித்துக் கொண்டு உட்கார்ந்து பல கஷ்டங்களை அனுபவிக்க நேரிடுகின்றது. இச் சங்கடத்தை நிவர்த்திக்க பெஞ்சுகள் போட்டிருக்கும் கீழ் வகுப்புகளில் நாற்காலிகளை அமைத்தால் மிகவும் சௌகரியமாக இருக்கும்.

எம். எல். வீரராகவன்,

சென்னை.



"மதனமாலா"வில் திறம்பட நடித்த ஸ்ரீராமன் இப்பொழுது "நவஜீவனம்" படத்தில் கதாநாயகனாக விளங்குகிறார்.

இடைஞ்சல் செய்யாதீர்

தற்சமயம் இந்த ஊரில் தியேட்டர் வசதி இருக்கிறது. புதுப் புதுப் படங்களாகவும் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் படம் பார்க்க வரும் சில தனி ரக ஆட்களைப் பற்றித்தான் குறை கூற வேண்டியிருக்கிறது. இவர்கள் தியேட்டருக்குள் நுழையும்போது படம் பார்க்க வேண்டுமென்ற நோக்கத்துடன் வருவார்களோ, அல்லது கலவரம் செய்வதற்கென்றே வருவார்களோ கடவுளுக்குத் தான் தெரியும். படம் ஆரம்பிக்க வேண்டியதுதான் தாமதம்; உடனே இவர்களின் அட்டகாசங்களும் ஆரம்பமாகி விடுகின்றன. பீடி, சுருட்டு முதலியவைகளை உபயோகித்துப் புகையைக் கிளப்புவதுடன், அவர்கள் பார்த்துக் கொண்டிருப்பது படம் என்பதைக்கூட நினைக்காமல் அடிக்கடி 'ஆய், ஊய்!' என்று கத்திக் கொண்டு படத்துடன் பேச ஆரம்பித்து விடுவார்கள். அதுவும் சாதாரணமான பேச்சல்ல. பெண்களும் தியேட்டரில் இருக்கிறார்களே என்கிற எண்ணம் சிறிதுமின்றி ரொம்பவும் கேவலமாகப் பேசுகிறார்கள். மேலும் படத்தில் பாட்டுகள் வந்தவுடன் கையைப் பலமாகத் தட்டி, தாளம் போட்டுக் கொண்டு பாட்டுகளைக் கேட்க முடியாதபடி செய்கிறார்கள். அவர்கள் இப்படி ஒவ்வொன்றாய் செய்து கொண்டிருப்பதால் சலிப்படைந்து, பக்கத்தில் உள்ளவர்கள், "எதற்காக சத்தம் போடுகிறீர்கள்; கொஞ்சம் அமைதியாய் இருந்து பார்க்கக் கூடாதா?" என்று கேட்டால் போதும். உடனே கேட்ட ஆட்கள் மேல் பாய்வார்கள். ஆக சில சமயங்களில் அடி பிடி சண்டைகள் கூட ஏற்படுகின்றன.

ஆதலால் இவ்விஷயங்களால் மற்றவர்களுக்கு எவ்வளவு இடைஞ்சலும், அருவருப்பும் உண்டாகிறதென்பதை இனியாவது நன்கு உணர்ந்து, தியேட்டருக்குள் மற்றவர்களுக்கு இடைஞ்சல் இராமல் அமைதியாய் நடந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன். பொது இடங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற விஷயத்தையும் கலவரம் செய்யும் சகோதரர்கள் கற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

எ. மரியையா மஸ்கிறஞாஸ்,

தூத்துக்குடி.

நுனிப்புல்

சென்ற மாதத்திய ‘ஊசியில்’ நாஸ்திகப் பிரசாரம் கலைத் துறையில் புகுந்திருப்பதையும், அதை ஆதரிப்பவர்களைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். ஆனால் சினிமாத் துறையில் சம்பந்தப் பட்ட பலர், ஆஸ்திகர்களாக—கடவுளிடம் பக்தி செலுத்துகிறவர்களாக—இருக்கும் விஷயத்தைக் குறிப்பிடாமல் விட்டது எனக்குக் குறையாகவே பட்டது.

* * *

பார்க்கப் போனால் இந்தத் துறையில் சம்பந்தப் பட்டவர்களில் சிலர் தான் நாஸ்திகக் கும்பலில் சேர்ந்தவர்கள்; பெரும்பாலானவர்கள் ஆஸ்திகர்கள் தாம். ஆகவே இரண்டொருவரை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

* * *

தியாகராஜ பாகவதர் தெய்வத்தின் மீது அபார நம்பிக்கை கொண்டவர். சமீபத்தில் மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலில் பாகவதரின் சங்கீதக் கச்சேரி நடை பெற்று, அவருக்கு “கந்தர்வ கானரத்னம்” என்ற பட்டம் அளிக்கப் பட்ட சமயம், பாகவதர் தமக்கு உள்ள தெய்வ பக்தியையும், நம்பிக்கையையும் வெளிப்படையாக வெளியிட்டார்.

* * *

பாகவதர் சிறையிலிருந்த சமயம் தமது விடுதலைக்கு வக்கீல்களின் வாதத்தை மட்டுமே நம்பியிருக்கவில்லை. உண்மையில் தெய்வ சகாயத்தைத் தான் அதிகமாக அவர் நம்பியிருந்தார்.

* * *

அவர் விடுதலையாகி வெளியே வந்ததும், டீ பார்ட்டிகளுக்கோ, டின்னர்களுக்கோ போகவில்லை. நேரே வட பழனி ஆண்டவன் கோவிலுக்குப் போய் தமது பிரார்த்தனையை செலுத்திக் கொண்டார். அதன் பிறகு சில காலம் வரை சமயபுரம் போன்ற கோவில்களுக்குப் போய் தமது பிரார்த்தனைகளைச் செலுத்தினார்.

* * *

கும்பகோணம் கும்பேஸ்வரர் கோவில் பிராகாரத்தில் இன்றும் ஒரு பிரகாசமான விளக்கு எரிந்து கொண்டிருப்பதைக் காணலாம். அதைப் போட்டவர்கள் திருச்சினாப்பள்ளி தியாகராஜா மில்ஸார் தான்.

* * *

அவ்வளவு தூரம் போவானேன்! பாகவதர் தவிர்க்க முடியாத காரணங்கள் இருந்தால் ஒழிய, கோவில்களில் சங்கீதக் கச்சேரி செய்ய அழைத்தால் மறுப்பதில்லை. கோவில் தர்மத்திற்கு என்று அவரிடம் போகிறவர்களை வெறுங் கையுடன் அவர் அனுப்புவதுமில்லை.

* * *

வட பழநி ஆண்டவனின் பக்தர்களான பல சினிமா நக்ஷத்திரங்கள் இருக்கிறார்கள். எம். எஸ். சுப்புலக்ஷ்மி செய்து வைத்த நடராஜா விக்ரகம் ஒன்று இன்றும் அந்தக் கோவிலில் இருக்கிறது.

• • •

சென்னையில் சின்னக்கடை அம்மன் கோவில் என்று ஒன்று இருக்கிறது. அது நல்ல சக்தி வாய்ந்த கோவில், எம். எஸ். சுப்புலக்ஷ்மி சேவாசதனம் படத்தின் மூலம் திரையில் தோன்ற ஆரம்பித்த காலத்தில் தினம் தவறாமல் இந்தக் கோவிலுக்குப் போய் வருவாராம்.

• • •

இந்தக் கோவிலில் நடக்கும் ஆடி மாத உத்ஸவத்தில் பல சங்கீத சினிமா நக்ஷத்திரங்கள் கச்சேரி செய்து வருகிறார்கள். அவர்களில் கே. பி. சுந்தராம்பாள் ஒரு வருஷம் கூடத் தவறமாட்டார்.

* * *

நம் நாட்டில் ஸாயி பாபாவின் பக்தர்கள் நிறைய ஏற்பட்டு விட்டார்கள். அவர்களுள் பிரபல நடிகை டி. ஆர். ராஜகுமாரியும் ஒருவர். அவருக்கு ஸாயிபாபாவிடம் அபாரபக்தி. தமக்கு ஸாயி பாபாவிடம் உள்ள பக்தியைக் காட்டுவது போல ஒரு பெரிய ஸாயி பாபாவின் சிலையை தமது பங்களாவின் வாசலில் வைத்திருக்கிறார்.

* * *

ராஜகுமாரி தம்மைச் சார்ந்தவர்களும் ஸாயி பாபா பக்தர்களாக இருக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் உடையவர். ஸாயி பாபாவின் படம் அமைத்த மோதிரத்தை அவ

ஸி. வி. வி. பந்துலுவும், எஸ். வரலக்ஷ்மியும் சொல்லுபவைகளை டி. ஆர். ராமச்சந்திரன் "நான்ஸென்ஸாக" நினைக்கிறார் போலும்! (நவஜீவனத்தில் ஒரு காட்சி)

ருடைய விரலிலும் அவரது குடும்பத்தினர் ஒவ்வொருவரது விரலிலும் பார்க்கலாம்.

• • •

ஸ்டார் கம்பைன்ஸ் சொந்தக்காரரான ஸ்ரீ. எஸ் ராமையாவும் ஒரு ஸாயி பாபா பக்தர். வியாழக்கிழமை தவறினாலும் தவறும்; அவர் மைலாப்பூர் ஸாயி பாபா கோவிலுக்குப் போவது தவறாது.

• • •

மகாவிஷ்ணு ராமசாமி அய்யங்கார் இருக்கிறாரே அவர் ஒரு வெங்கடேச பக்தர். அவருக்கு அடிக்கடி வெங்கடரமண ஸ்வாமி கனவில் தோன்றுவது வழக்கமாம்.

• • •

டைரெக்டர் சுப்ரமண்யம் மற்றொரு வெங்கடேச பக்தர். கீத காந்தி படம் முடிவடைந்த கையோடு, தாடி வளர்த்து, அதை திருப்பதிக்குப் போய்த் தான் எடுத்து விட்டு வந்தார்.

• • •

டைரெக்டர் சுப்ரமண்யம் தாடி வளர்த்த விஷயத்தைப் பற்றி எழுதும் போது வேறொரு டைரெக்டர் தாடி வளர்க்கும் விஷயம் எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது.

• • •

டைரெக்டர் சுந்தர் ராவ் நட்கர்னி ஒரு படம் டைரெக்ட் செய்ய ஒப்புக் கொண்டால் அது முடியும் வரை தமது தாடியை எடுக்கவே மாட்டார். அந்த முறையில் இப்பொழுது அவர் வளர்த்து வரும் தாடியை கிருஷ்ண விஜயம் படம் முடிந்ததும் தான் எடுப்பாராம்.

ரூ. 10,000 இனாம்.

தங்கம் தோலா ஒன்று ரூ. 2—8—0

அமெரிக்கன் நியூ கோல்டின் பிராபல்யம்

ஒரு முறை பரீட்சித்தால் எப்பொழுதும் திருப்தி

ஹஸாரிலால் பதன் கோட் எழுதுவது:

"உமது அமெரிக்கன் நியூ கோல்ட் பார்ஸல் கிடைத்தது. எனது நன்றி. இந்த தங்கத்துக்கும் உண்மையான தங்கத்துக்கும் வித்தியாசமே எனக்கு புலனாகவில்லை. மறு தபாலில் தயவுசெய்து எனக்கு 6 தோலா அனுப்புங்கள். மற்ற ஆர்டர்கள் அடுத்து வரும்."

உறைகல் மேல் இந்த தங்கம் உண்மை தங்கத்தின் அடையாளத்தை செய்கிறது. இதை கம்பியாகவும் தகடுகளாகவும் செய்யலாம். இதைக் கொண்டு பலவித ஆபரணங்களும் தயாரிக்கலாம். மிக்க புத்திசாலியான நகை வியாபாரியும் இதை உண்மை தங்கமில்லை என்று கூறுவது அசாத்தியம். மேற்படி சர்டிபிகேட்டை பொய் என்று நிரூபிப்பவருக்கு

ரூ. 10,000 இனாம் கொடுக்கப்படும்.

இதை பிரசித்தப்படுத்தவே தோலா விலை ரூ. 2-8-0க்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தபால் செலவு பிரத்யேகம். 3 தோலாவுக்கு ரூ. 7. 6 தோலாவுக்கு ரூ. 13. 15 தோலாவுக்கு ரூ 30. 40 தோலாவுக்கு ரூ. 70.

திருப்தியில்லாவிட்டால் பணம் வாபஸ் அனுப்ப உத்தரவாதம்

இலவசம்: மூன்று தோலா வாங்குபவர்களுக்கு பாக்கிங் இலவசம். ஆறு தோலா வாங்குபவர்களுக்கு பாக்கிங்கும் தபால் செலவும் இலவசம்.

IMPERIAL COMMERCIAL COMPANY REGD;

(G. D. M.) JULLUNDER CITY.

இது செய்தி

எம். எஸ். உதவிக் கச்சேரி

சென்ற மாதம் 30-ந் தேதி காந்திஜி நிதி வசூலுக்காக பம்பாயில் எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் சங்கிதக் கச்சேரி நடை பெற்றது. இந்தக் கச்சேரிக்கு லக்ஷத்தி இருபத்தி ஐயாயிரம் ரூபாய் வசூலாயிற்று. பம்பாய் மேயர் ஸ்ரீ. எஸ். கே. படீல் பாடகியின் திறமையைப் புகழ்ந்து பேசினார்.

தியாகம்

சென்ற மாதம் 25-ம் தேதி ராஜாஜி ஹாலில், தென்னிந்திய பத்திரிகையாளர் சம்மேளனத்தைச் சேர்ந்த 'பிரஸ் கிளப்' அங்கத்தினர்கள், கவி தாகூரின் தியாகம் என்ற ஆங்கில நாடகத்தை நடித்தனர். நாடகம் சிறப்பாக அமைந்திருந்தது.

"தியேட்டர்களை மூடவும்"

"மாகாண சர்க்கார்கள் கண்டபடி, மனம் போன போக்கில் தமாஷா வரி விதிப்பதால் சினிமாத் தொழில் பெரிதும் பாதிக்கப் படுவதுடன், பொது ஜனங்கள் அதிகக் கட்டணம் செலுத்த வேண்டியதாகிறது. ஆகவே இந்தியாவில் இத் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரும் சர்க்காருக்கு தமது கண்டனத்தைத் தெரிவிக்க ஜூன் மாதம் முதல் தேதி சினிமா சம்பந்தப்பட்ட காரியாலயங்களை மூடுவதென முடிவு செய்திருக்கின்றனர். இந்த ஏற்பாட்டின்படி தென்னிந்தியாவிலும் சினிமாத் தொழில் சம்பந்தப்பட்ட யாவரும் தியேட்டர், ஆபீஸ் முதலியவைகளை மூடி தம் கண்டனத்தையும் தெரிவிக்க வேண்டும்" என, தென்னிந்திய பிலிம் சேம்பர் தலைவர் ஸ்ரீ. கே. சுப்ரமண்யம் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

டெக்னீஷ்யன்கள் கூட்டம்

சென்ற மாதம் 24-ம் தேதி சித்ரா டாக்கீஸில், சினி டெக்னீஷ்யன்கள் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு கனம் மந்திரி சஞ்சீவி ரெட்டி தலைமை வகித்தார். சினிமாத் தொழிலின் சக்தியையும், அரசாங்கம் தொழிலுக்கு உதவி செய்யவேண்டிய அவசியத்தைப் பற்றியும் பேசினார்கள். மந்திரி தம்மாலான உதவிகளைச் செய்வதாக வாக்களித்தார்.

என். எஸ். கே. கோஷ்டி இலங்கை விஜயம்

சென்ற மாதம் கிருஷ்ணன் - மதுரம் கோஷ்டியினர் இலங்கைக்கு விஜயம் செய்து அங்கு அமோகமான வரவேற்பைப் பெற்றுத் திரும்பினார்கள். ஆனால் இலங்கையிலுள்ள எந்தப் பத்திரிகையுமே இவர்களது விஜயம் பற்றிய செய்தியை வெளியிடவில்லை. வரவேற்புக் கமிட்டியினர் பத்திரிகைக்காரர்களை மதிக்காமல் நடந்து கொண்டதுதான் இதற்குக் காரணமாம்.

பத்மா தாயாரானார்

"சபாபதி" புகழ் நடிகை ஆர். பத்மாவுக்கு சமீபத்தில் ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது.

தியேட்டர் முதலாளிகள் மறைவு

மாஜி மேயரும், ஸன் தியேட்டர் முதலாளியுமான ஸ்ரீ. டி. சுந்தர்ராவ் நாயுடு இம்மாதம் 7ம் தேதி மாரடைப்பால் காலமானார். அவரது மரணம் காரணமாக ஸன் தியேட்டர் 8ம் தேதி மூடப்பட்டது. தென் இந்திய பிலிம் சேம்பரின் காரியாலயமும்



டைரெக்டர் பத்மனபனின் "ரஜ்ரேகா" தெலுங்குப் படத்தில் பானுமதி சிரிக்கும் வண்ணம் அந்த முனிவர் என்ன சொன்ஞரோ தெரியவில்லை.

தங்களது உப தலைவரின் மரணத்திற்காக 9ம் தேதி யன்று மூடப்பட்டிருந்தது.

* * * *

இம்மாதம் 4ம் தேதி சென்னை கேஸினே தியேட்டர் முதலாளி ஸ்ரீ. ஜே. எச். இரானி காலமானர். அவரது மரணத்திற்காக, 5ம் தேதி காஸினே, ஸ்டார் ஆகிய இரு தியேட்டர்களும் மூடப்பட்டன.

ஸினி லெபரேடரி தீர்ப்பு

அடையாறிலுள்ள மதரூஸ் ஸினி லெபரேடரி தொழிலாளர்களுக்கும் நிர்வாகிகளுக்கு மிடையே ஏற்பட்ட தகராறு தொழில் விசாரணைக்கோர்ட்டின் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டது. தொழிலாளரை வேலையிலிருந்து நீக்கியது சரி யென்றும், சந்தர்ப்பங்களை கவனிக்கையில் அவர்களை மறுபடியும் வேலைக்கு எடுத்துக் கொள்வது முடியாது என்றும் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

கிட்டப்பா ஹிந்தி சங்கீத பாடசாலை

இம்மாதம் 9ம் தேதி, தியாகராய நகரில் கிட்டப்பா ஹிந்தி சங்கீத பாடசாலையின் திறப்பு விழா நடைபெற்றது. மேயர் ஸ்ரீ. எஸ். ராமஸ்வாமி நாயுடு பாடசாலையை திறந்து வைத்தார். விழாவுக்கு 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஸ்ரீ. ஸி. ஆர். ஸ்ரீனிவாஸன் தலைமை வகித்தார்.

மச்ச ரேகை

நடிகர் டி. ஆர். மஹாலிங்கம் பட முதலாளியாகி விட்டார். "சுகுமாரன் பிக்சர்ஸ்" என்ற சொந்த படக் கம்பெனியை அவர் ஆரம்பித்திருக்கிருர். தஞ்சை ராமையா தாஸ் எழுதி நாடக மேடையில் பிரசித்தமான கதை மச்ச ரேகை. அதைப் படமாகத் தயாரிக்க இம்மாதம் 12-ந் தேதி யன்று சென்னை நியூடோன் ஸ்டுடியோவில் பூஜை போட்டு ஒரு பாட்டு கூட பதிவு செய்து விட்டனர். இதில் அஞ்சலி தேவி, கிருஷ்ணன், மதுரம், சாந்த குமாரி முதலியவர்களை ஒப்பந்தம் செய்திருக்கிருர்.

ஆந்திராவில் தமிழ் நாடகம்

ஆந்திர தேசத்திலுள்ள ஓங்கோலில் நடைபெற்ற மாட்டுச் சந்தை சம்பந்தமான கண் காட்சியில் ஸ்ரீ. ஜெய பாரத சபையினரின் கிருஷ்ண லீலா தமிழ் நாடகம் ஒன்பது நாட்கள் நடை பெற்றது. நல்ல வரவேற்பைப் பெற்ற இவர்களது நாடகத்துக்கு இம் மாதம் 2ம் தேதி மந்திரி கனம் என். சஞ்சீவி ரெட்டி விஜயம் செய்து நாடகத்தைப் பெரிதும் பாராட்டினர்.

தியேட்டர் மூடப்பட்டது

தர்மபுரியில் சுமார் எட்டு வருஷங்களாக நடைபெற்று வந்த 'ஸ்ரீ கணேசா' என்ற சினிமாக் கொட்ட

கையின், லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டு அங்கு படங்கள் திரையிடப்படுவது நிறுத்தப்பட்டு விட்டது. இத்தியேட்டரில் சுகாதார வசதிகள் சரியாக இல்லாததுதான் இதற்குக் காரணமாம்.

தியேட்டர்களில் புகை பிடிக்காதே

சினிமா, நாடகம், நாட்டியம் முதலிய காக்ஷிகள் நடக்கும் தியேட்டர்களில் புகை பிடிக்கக் கூடாதென சென்னை சர்க்கார் இம் மாதம் 13-ம் தேதி ஒரு உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர். தியேட்டருக்குள் யாரும் புகை குடிக்காமல் பார்த்துக் கொள்வது தியேட்டர்காரரின் பொறுப்பு. தியேட்டர்களுக்கு லைசென்ஸ் வழங்கும் போது இதுவும் ஒரு நிபந்தனையாக சேர்க்கப்படுமாம்.

இந்த உத்திரவு சென்னை நகர் தவிர மற்ற வெளியூர்த் தியேட்டர்களுக்குத் தான். இதை சென்னை நகரில் அமுல் நடத்த, நகர போலீஸ் சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டியிருக்கிறதென்றும், அது பற்றி சர்க்கார் தனியே ஆலோசிக்கும் என்றும் தெரிகிறது.

மாயா ரம்பா

மாயா ரம்பா என்ற கதையைத் தமிழிலும் தெலுங்கிலும் படமாகத் தயாரிக்க முனைந்திருக்கிறார் ஸ்ரீ. நந்தலால் படேவியா. அஞ்சலி தேவி, ஸி. எஸ். ஆர்., சௌதாமினி இவர்கள் பிரதம பாகங்களில் நடிக்கப்போகும் இப் படத்தை டி. பி. சுந்தரம் டைரெக்ட் செய்கிறார்.

நாடக நடிகர் மரணம்

இம் மாதம் 7-ம் தேதி நாடகத்தில் ஹாஸ்ய பாகங்களில் நடித்து வந்த ஸ்ரீ. பி. மாணிக்கம் பிள்ளை சேலத்தில்



காலமானார். சேலம் நாடகத் தொழிலாளர்கள் அவரது ஈமக்கிரியைகளை சிறப்பாக நடத்தினார்களாம்.

அரங்கேற்றம்

இம் மாதம் 9ம் தேதி பிரபல அட்வகேட் ஸ்ரீ. பி. கிருஷ்ணமாச்சாரியாரின் பெண் பேபி இந்திராவின் நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. அன்றைய அரங்கேற்றத்திற்கு ஸ்ரீ. ஈ. கிருஷ்ணய்யர் தலைமை வகித்தார். இந்திராவின் நடனத்தைப் புகழ்ந்து பலர் பேசினர். தஞ்சாவூர் ஆர். கே. மூர்த்தியின் மிருதங்க வாசிப்பு அன்றையக் கச்சேரி சிறப்பாக அமைந்ததற்கு முக்கிய காரணம் என்று கூறலாம்.

விப்ரநாராயணா

வாஹினி பிக்சர்ஸார் அடுத்தபடி விப்ரநாராயணாவைத் தமிழில் படமெடுக்கத் திட்டம் போட்டு வருகிறார்களாம்.

வாழ்த்துகிறோம்

நமது பண்ருட்டி ஏஜெண்ட் ஸ்ரீ. கே. சொக்கநாதன், ஸ்ரீ. பச்சு. வி. கோபால கிருஷ்ண குப்தாவின் புத்திரி சௌ. சுசீலாபாயை இம் மாதம் 9ம் தேதி மாயவரத்தில் தமது வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார்.

* *

ரேணுகா பிலிம்ஸ் உதவி டைரெக்டர் சிரஞ்சீவி எம். ஏ. கணேசன், சௌ. குந்தளாம்பாளை இம் மாதம் 8ம் தேதி மணந்து கொண்டார். தம்பதிகளுக்கு எமது மனமார்ந்த ஆசிகள்.

மற்றொரு லைலா மஜ்னு

வாஹினி ஸ்டுடியோவில் தயாராகி வரும் பரணி பிலிம்ஸாரது லைலா மஜ்னு தெலுங்குப் படத்தைத் தமிழ் வசனங்களுடன் வெளியிட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இப் படத்தில் பானுமதி பிரதம பாகத்தில் நடிக்கிறார்.

பைன் ஆர்ட்ஸ் அஸோஸியேஷன்

பெரம்பூரிலுள்ள நியூ ஹாலில் பைன் ஆர்ட்ஸ் அஸோஸியேஷனின் சார்பில் இம் மாதம் 8ந் தேதி யன்று பத்தமடை கிருஷ்ணனின் சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. எம். அனந்தராமன் பிடிலும், ஒய். கிரிச ஐயர் மிருதங்கமும் வாசித்தனர்.

நடிகர் சங்கம்

என். எஸ். கிருஷ்ணனது முயற்சியின பேரில் சென்னையில் நடிகர்கள் சங்கம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அதன் முதல் கூட்டம் நியூடோன் ஸ்டுடியோவில் சென்ற 15-ந் தேதி யன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு எம். கே. ராதா, சாரங்கபாணி, மஹாலிங்கம் முதலிய முக்கிய நடிகர்கள் வந்திருந்தனர். சங்கத்திற்கு மஹாலிங்கம் 500 ரூபாய் நன்கொடை அளித்தார்.

ஏப்ரல் 24-ந் தேதியன்று சுகுண விலாஸ சபையார் நடத்திய "சந்திரஹரி" நாடகத்தில் மதி சந்திராவாக நடித்துப் பாராட்டுதலைப் பெற்ற எம். எஸ். சரஸ்வதி.

ஜெமினியில் ஸ்ரீராமன்

மதனமாலா, நவஜீவனம் முதலிய படங்களில் நடித்த ஸ்ரீராமன் ஜெமினி ஸ்டுடியோவில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்.

நாட்டியப் பள்ளிக்கூடம்

ஸ்டேட் புரொடக்ஷன்ஸாரின் கனகாங்கி படத்தில் நடிப்பதற்காகச் சென்ற (நடிகை கே. நாகலக்ஷ்மியின் புத்ரி) குமாரி சுப்புலக்ஷ்மி அந்த வேலை முடிந்ததும் சென்ற மாத மத்தியில், பம்பாய் மாதுங்காவில் ஒரு நடன விருந்தளித்தார். இதைப் பற்றி சில பம்பாய் பத்திரிகைகள் மிகப் பாராட்டி எழுதியுள்ளன. இவர் நடனத்தைப் பார்த்தபின் அங்குள்ள தென்னிந்தியர்கள் சிலருக்கு நாட்டியம் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டிருக்கிறதாம். அதன் விளைவாக சுப்புலக்ஷ்மியும் அவரது தாயாரும் பயிண்தர் என்னும் ஊரில் தங்கி பாரத் நிகேதன் என்ற பெயருடன் ஒரு நடனப் பள்ளியை ஆரம்பித்து நடத்தி வருகிறார்களாம். இந்தப் பள்ளியில் சேருவதற்கு மாணவ மாணவிகள் போட்டியிட்டுக் கொண்டு முன் வருகிறார்களாம்.

நூறுவது தின விழா

சென்ற மாதம் 23-ந் தேதியன்று திண்டிவனம் வெங்கடேசா டாக்கிஸில் "வேதாள உலகம்" படத்தின் நூறுவது தின விழா வக்கீல் வி. கோபால கவுண்டர் தலைமையில் நடைபெற்றது. தியேட்டரின் சொந்தக் காரருக்கும், விநியோகஸ்தருக்கும் வெள்ளிக் கோப்பைகள் பரிசாக வழங்கப் பட்டன.

சென்னையிலும் அமல் நடத்துக

சினிமா ரஸிகர்கள் சங்கம், சென்னை சர்க்கார் தியேட்டர்களில் புகை பிடிக்கக் கூடாது என்று சட்டம் கொண்டு வந்திருப்பதை வரவேற்று, அச்சட்டம் இப்பொழுது சென்னை நகரம் தவிர மற்ற பகுதிகளுக்குத் தான் போடப்பட்டிருக்கிறது. அதை சென்னை நகரத்திலும் அமல் நடத்த வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொண்டு ஒரு தீர்மானம் செய்திருக்கின்றனர்.

சென்ற மாதம் 17-ந் தேதி குமாரி வனஜாவின் பரதநாட்டியம் சென்னை மியூஸியம் தியேட்டரில் நடைபெற்றது.

ஹைதராபாத்தில் ஸ்டுடியோ

ஹைதராபாத்தில் முதன் முதலாக, ஹைதராபாத் பிலிம் ஸ்டுடியோ என்ற ஒரு ஸ்டுடியோ ஆரம்பமாகியிருக்கிறது. கட்டட வேலைகள் முடிவடைந்து வருகின்றனவாம். இதன் சொந்தக்காரர் ஸ்ரீ. மகாவீர் சிங், தேசத்திற்கும், மக்களுக்கும் பயன் படக் கூடிய ஹிந்தி, தமிழ், தெலுங்குப் படங்களைத் தயாரிக்க திட்டம் போட்டிருக்கிறாராம்.

பாடகிக்குப் பரிசு

தமது இன்னிசைக் கச்சேரியின் மூலம், காந்திஜீயின் நிதிக்கு ஒன்றே கால் லக்ஷம் ரூபாய் வசூல் செய்து கொடுத்த ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மிக்கு, பம்பாய் மாகாண காங்கிரஸ் கமிட்டியினர் வெள்ளியினாலாகிய காந்திஜீயின் சிலை ஒன்றை பரிசாக அளித்தார்கள்.

பிரம்மலோகம்

ரத்னகுமார்

சீக்கிரமே திரையிடக் கூடிய படங்களில், நியூ டோன் ஸ்டுடியோவில் தயாராகி வரும் முருகன் டாக்கீஸின் 'ரத்ன குமார்' ஒன்றாக இருக்குமாம். இப்படத்தில் சின்னப்பாவும், பானுமதியும் பிச்சைக்கார தம்பதிகளாகத் தோன்றி பிரமாதமாக நடித்திருக்கிறார்களாம். மொத்தத்தில் இப் படம், டைரெக்டர் கிருஷ்ணன், பஞ்சு இவர்களின் பிரமாத வெற்றியாக இருக்குமாம்.

மங்கையர்க்கரசி

நாகூரின் மேற்பார்வையில் 'மங்கையர்க்கரசி' படப் பிடிப்பு அநேகமாக முடிவடைந்து விட்டதாம். பி. யு. சின்னப்பா இப் படத்தில் மூன்று வேஷங்களில் தோன்றுகிறார். அவருடைய சிலம்ப விளையாட்டு இப் படத்தின் சிறப்பான அம்சமாக இருக்குமாம். மற்றும், கண்ணாம்பாவும், அஞ்சலி தேவியும் பிரதம பாகங்களில் நடிக்கின்றனர்.

லைலா மஜ்னு

பாலாஜி பிக்சர்ஸின் 'லைலா மஜ்னு' நாகூரின் டைரெக்ஷனில் வெகு மும்முரமாகப் படமாகி வருகிறது நியூ டோன் ஸ்டுடியோவில். மியூஸிக் டைரெக்டர் எஸ். வி. வெங்கட்ராமன் இப்படத்தில் தம் திறமை முழுமையும் காட்டியிருக்கிறாராம். குழந்தை லைலாவாகவும், மஜ்னுவாகவும் நடித்திருப்பவர்கள் பிரமாதமாக நடித்திருக்கிறார்களாம்.

சித்திராங்கி

மினர்வா பிக்சர்ஸார் தாங்கள் தயாரிப்பதாக அறிவித்த 'புல் புலையானை' விட்டுவிட்டு 'சாரங்கதரா' கதையை சித்திராங்கி என்ற பெயரில் தயாரிப்பதில் முனைந்திருக்கிறார்கள். மஹாலிங்கத்தின் மூன்று பாட்டுகள் பிரகதியில் ஒலிப்பதிவு செய்யப் பட்டிருக்கிறது.

தேவமனோஹரி

இன்னும் இரண்டொரு காட்சிகள்தாம் பாக்கியாம். அதுவும் முடிந்து விட்டால் ஆர்கேயெஸ் பிக்சர்ஸின் 'தேவமனோஹரி' வெளிவரத் தயாராகி விடுமாம்.

நாட்டிய ராணி

பாஸ்கர் பிக்சர்ஸாரது 'நாட்டிய ராணி'யில் பி. எஸ். சரோஜா, கே. ராஜாமணி இவர்கள் நடிக்கும் காதல் கட்டம் ஒன்று சமீபத்தில் ஜெமினி ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது. பிரபல நட்டுவனார் மாதவன் இப்படத்திற்கு சில அரிய நடனங்களை அமைத்துக் கொடுத்திருக்கிறாராம்.

குணசுந்தரி

வாஹினியின் 'குணசுந்தரி' தெலுங்குப் படம் அவர்களது சொந்த ஸ்டுடியோவில் தயாராகி வருகிறது. மாலதி, சாந்தகுமாரி, சிவராவ் ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர்.

வாழ்க்கை

ஏவி. மெய்யப்ப செட்டியாரின் டைரெக்ஷனில் அவருடைய 'வாழ்க்கை' வெகு ஜரூராகத் தயாராகி வருகிறது. சமீபத்தில், ஒரு கல்யாணக் காட்சி படமாக்கப்பட்டது.

மாயாவதி

மாடர்ன் தியேட்டர்ஸில் டி. ஆர். சுந்தரத்தின் டைரெக்ஷனில் தயாராகி வரும் 'மாயாவதி' படப் பிடிப்பு முடிவடையும் தருவாயிலிருக்கிறதாம். மஹாலிங்கமும், அஞ்சலி தேவியும் பிரதம பாகங்களில் நடிக்கின்றனர்.

பொன்முடி

எல்லிஸ். ஆர். டங்கனின் டைரெக்ஷனில் தயாராகும் இப்படத்தில் நரசிம்ம பாரதியும், மாதுரி தேவியும் பிரதம பாகங்களில் நடிக்கின்றனர். இப்படத்திற்காக சமீபத்தில் மஹாபலிபுரத்தில் சில வெளிப்புறக் காட்சிகள் படம் பிடிக்கப் பட்டனவாம்.

இன்பவல்லி

சியாமளா பிக்சர்ஸாரது 'இன்பவல்லி' படத்திற்கான ஹாஸ்ய பாகங்கள் தற்பொழுது படமாக்கப் பட்டு வருகின்றன. ரத்னா ஸ்டுடியோவில் தயாராகி வரும் இப்படத்தை எஸ். நொடானி டைரெக்ட் செய்கிறார்.

கன்னியின் காதலி

ராம்னாத்தின் டைரெக்ஷனில் கோவை ஸெண்ட்ரல் ஸ்டுடியோவில் ஜூபிடரின் 'கன்னியின் காதலி' படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. இப்படம் அநேகமாக ஜூலை மாதத்தில் திரையிடப் படலாமென எதிர்பார்க்கப் படுகிறது.

எஸ். வரலக்ஷ்மி

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

ஊருக்கு அழைத்துச் சென்று விடுவதென்ற—அவரது பெற்றோர்களின்—எண்ணம் ஈடேறவில்லை. மேற்படி படத்தில் நடித்துக் கொண்டிருந்த போது, வரலக்ஷ்மியிடம் பிரபலம் அடைவதற்கான திறமைகள் இருப்பதையும், சென்னைக்கு வந்த சில மாதங்களுக்குள்ளேயே அந்தப்பெண் தமிழைக் கற்றுக் கொண்டு தங்கு தடையின்றிப் பேசி வந்ததையும் கவனித்தார் கே. சுப்ரமண்யம். அவர் அதோடு நில்லாமல் தாம் தயாரித்து வந்த சேவா சதனம் தமிழ்ப் படத்தில் அவருக்கு சுகுணா என்ற வேஷத்தைக் கொடுத்து நடிக்கச் செய்தார். வரலக்ஷ்மி 'வெடுக் வெடுக்' கென்று பேசிக் கொண்டு எம். எஸ். சுப்புலக்ஷ்மியுடன் 'கேரம்' விளையாடியதும், கப்பல், கத்திக் கப்பல்' என்று பாடியிருப்பதும் நேயர்களுக்கு ஞாபகமிருக்கும்.

சேவா சதனத்தில் வரலக்ஷ்மியின் உழைப்பு பாராட்டத் தக்கபடி அமையவே, கே. சுப்ரமண்யம் தாம் அடுத்தபடியாகத் தயாரித்த பிரேம் சாகர் (இன்ப சாகரன் மொழி பெயர்ப்பு) ஹிந்திப் படத்திலும் அவரை நடிக்கச் செய்தார். அதே சமயத்தில் அவர் சதி முரளி படத்திற்கும் ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டார். பிரேம் சாகரில் இளம் கதாநாயகனாகவும், சதி முரளியில் (டி. ஆர். மஹாலிங்கத்துடன்) இளம் முரளியாகவும் வரலக்ஷ்மி நடித்திருக்கிறார்.

பிரேம் சாகர் படமே ஒரு தோல்வியாய் முடிந்தது. சதி முரளியிலோ அவரது நடிப்பு சுமாராகவே அமைந்தது. இதன் பின்னர் வரலக்ஷ்மி பரசுராமர் தமிழ்ப் படத்திலும் நடித்தார்.

இந்த சமயத்தில் ராமபிரம்மம் இல்லாளு தெலுங்குப் படத்தைத் தயாரிக்கத் தொடங்கினார். தம்மால் சினிமாவில் புகுத்தப்பட்ட வரலக்ஷ்மிக்கு நல்ல சந்தர்ப்பம் அளித்து, அவரைத் திறம்பட நடிக்கச் செய்துவிட வேண்டும் என்ற அவா அவருக்கிருந்தது. அதற்கிணங்க அவர் வரலக்ஷ்மிக்கு தம் இல்லாளுவிலும், அடுத்தபடியாகத் தயாரித்த அபவாதுவிலும் நடிப்பதற்கு நிறைய சந்தர்ப்பம் அளித்தார். அந்த சந்தர்ப்பங்களை வரலக்ஷ்மி நழுவ விடாது பயன்படுத்திக் கொண்டு நன்கு நடித்திருக்கிறார்.

வரலக்ஷ்மியின் தாயார் சாவித்திரி அம்மாள்

மேற் சொன்ன இரு தெலுங்குப் படங்களுக்குப் பிறகு வரலக்ஷ்மி ஆராய்ச்சி மணி, ஜகதலப்ரதாபன் ஆகிய இரு தமிழ்ப் படங்களில் நடித்தார். ஜகதலப்ரதாபனில் அவர் நான்கு கன்னியர்களில் ஒருவராய் நடித்திருப்பதை நேயர்கள் சுலபமாய்

ஞாபகப் படுத்திக் கொள்ளலாம். இதன் பிறகு வரலக்ஷ்மி ராமபிரம்மத்தின் ரயத்து பிட்டா தெலுங்குப் படத்தில் நடித்தார்.

அத்துடன் வரலக்ஷ்மியின் சினிமா வாழ்க்கையின் முதற் பகுதி முடிவடைந்து விட்டது என்று சொல்ல வேண்டும். அப்பொழுது அவர் பதினான்காவது வயதை அடைந்திருந்தார். அந்த 'இரண்டுங் கெட்டான் வயது' காரணமாக, அவர் சிறுமி வேஷத்திலும் சரி; மங்கை வேஷத்திலும் சரி; நடித்தால் சோபிக்காது என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. அதனால் அவர் பேசாமல் தம் பெற்றோர்களுடன் தம் சொந்த ஊருக்குத் திரும்பிப் போய் விட்டார்.

சொந்த ஊரில் வரலக்ஷ்மி ஐந்து வருஷ காலத்தை ஆனந்தமாகக் கழித்து வந்தார். ஆனால் அந்த ஓய்வு இன்பத்தை அவருக்கு அதற்குமேல் விட்டு வைக்க டைரெக்டர் ராமபிரம்மம் விரும்பாதவர் போல், தாம் தயாரிக்கத் தொடங்கிய மாயா லோகம் தெலுங்குப் படத்தில் நடிக்க வரும்படி அவரை அழைத்தார்.

வரலக்ஷ்மிக்கே மீண்டும் சினிமா உலகத்திற்குத் திரும்பி, நன்கு நடித்து, நக்ஷத்திரப் புகழை அடைய வேண்டுமென்ற ஆசை துடித்துக் கொண்டிருந்தது. எனவே, அவர் ராமபிரம்மத்தின் அழைப்பை சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு, மாயா லோகத்தில் நடிப்பதற்காக சென்னைக்கு வந்து சேர்ந்தார். அதுமுதல் அவரது சினிமா வாழ்க்கையின் இரண்டாம் பகுதி ஆரம்பமாகி விட்டது என்று கூறலாம்.

அந்த இடைக்கால ஓய்வும், பருவ வயதும், அவரது முகத்தோற்றம், உடலமைப்பு இவற்றில் அடையாளத்திற்கு மீறிய மாறுதலை ஏற்படுத்தி, அவரை ஒரு கவர்ச்சி மிகுந்த கட்டழகியாக திரும்ப சினிமாவுலகத்திற்கு அளித்திருக்கிறது. "முன்பு படங்களில் நாம் பார்த்த அதே வரலக்ஷ்மிதானா இவர்?" என்ற சந்தேகம் நமக்கு ஏற்படுவதற்கு இந்த மாறுதல் தான் காரணம். அவரது சினிமா வாழ்க்கையின் முற்பகுதியைவிட பிற்பகுதி சோபிதமாய் விளங்குகிறது. இந்த இரண்டாம் பகுதியில் சொற்ப வருஷங்களுக்குள் வரலக்ஷ்மிக்கு ஏககாலத்தில் நடிப்பதற்குப் பல படங்களும், அப்படங்களில் நல்ல பிரதானவேஷங்களும் கிடைத்து வருகின்றன. அதன் விளைவாக அவர் இப்பொழுது நக்ஷத்திரப் பதவியை அடைந்துள்ளார்.

வாலி சுக்ரீவ்

மாயா லோகம் படத்தில் வரலக்ஷ்மியின் நடிப்பும், பாட்டும், தோற்றமும் மிகப் பாராட்டத் தக்கபடி இருந்தன. இதைத் தொடர்ந்து அவர் பளநாடு யுத்தம் என்ற தெலுங்குப் படத்திலும் நன்கு நடித்தார்.

ஆரம்பம் முதலே தமிழ் தெலுங்கு ஆகிய இரு பாஷை நக்ஷத்திரமாக விளங்கிவரும் வரலக்ஷ்மியை, அவரது சினிமா வாழ்க்கையின் இரண்டாம் பகுதியில் ஒரு தெலுங்கு நக்ஷத்திரமாக மட்டும் இருந்துவிட தமிழ்ப் பட உலகம் இஷ்டப்படவில்லை. காமவல்லி

தமிழ்ப் படத்தைத் தயாரித்தவர்கள் அவரைத் தம் கதாநாயகியாக்கிக் கொண்டார்கள். டைரெக்டர் நாக பூஷணமும் தமது துளஸி ஜலந்தர் தமிழ்ப் படத்தில் ஒரு முக்கிய வேஷத்தை அவருக்களித்தார்.

இதுவரை வரலக்ஷ்மி நடித்த படங்கள் எல்லாவற்றிலுமே சிறந்து விளங்குவதும், அவருக்கு நக்ஷத்திரப் பதவியை அளித்ததுமான படங்கள் தமிழில் ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணியும், தெலுங்கில் பால ராஜுவும் ஆகும். முந்தின படத்தில் அவர் செங்கமலத்தின் வேஷத்தை மிகத் திறமையுடன் நடித்து தமிழ் ரஸிகர்களின் கவனத்தையும், மனத்



தையும் மிகக் கவர்ந்திருக்கிறார். பிந்தின படத்தின் மூலமோ அவர் ஆந்திர ரஸிகர்களின் அளவு கடந்த அபிமானத்தைப் பெற்றிருக்கிறார். சிந்தாமணி தமிழ் நாட்டிலும், பால ராஜு ஆந்திர தேசத்திலும் அதிக வாரங்கள் ஓடி ஏராளமான பண வசூலை ஏற்படுத்தியிருக்கின்றன. வரலக்ஷ்மிக்குச் சினிமாவுலகில் தற்போது ஏற்பட்டுள்ள கிராக்கியும், நக்ஷத்திரப் பதவியும் இப்படங்களால் ஏற்பட்டவையே என்று சொல்ல வேண்டும்.

அபூர்வ சிந்தாமணிக்குப் பிறகு வரலக்ஷ்மி போஜன் தமிழ்ப் படத்தில் நடித்தார். இப் படத்திற்கு சாதாரண வெற்றியே கிடைத்தது.

சமீபத்தில் வரலக்ஷ்மி ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பில்ம்ஸாரின் நவஜீவனம் தமிழ்ப் படத்தில் நடித்து முடித்திருக்கிறார். இம் மாதம் வெளிவரும் இப்படத்தின் மூலம் அவரது புகழ் மேலும் ஒருபடி உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வரலக்ஷ்மி நவஜீவனத்தில் ஒரு காட்சிக்காக மோட்டார் ஓட்ட ஆரம்பித்த ரஸமான சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. ஸ்ரீ. எம். ஸி. டி. சிதம்பரம் செட்டியாரின் 'பெட்போர்டு ஹௌஸில்' மேற்படி காட்சி தயாரிக்கப்பட்டது. வரலக்ஷ்மிக்கோ மோட்டார் ஓட்டத் தெரியாது. அப்பொழுதே கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். தேவாலயங்களின் ரதங்கள் முதன் முதலாகப் புறப்படுமுன் 'காவு' கொடுக்கப்படுவதுண்டல்லவா? ஆனால் வரலக்ஷ்மி முதன் முதலாக ஓட்ட ஆரம்பித்த மோட்டாருக்கு காவு எதுவும் கொடுக்கப்படவில்லை; அதுவே காவு வாங்கி விட்டது. 'என்ன பெரிய விபத்தோ' என்று நீங்கள் பயப்பட வேண்டாம். எதிரில் ஓரமாக வைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய சிமென்ட் தொட்டி தூள் தூளாகி விட்டது; அவ்வளவுதான்! நல்ல வேளையாக 'உங்கள் அபிமான நக்ஷத்திரம்' அந்தக் கதிக்கு ஆளாகவில்லை. ஆனால் இப்பொழுதெல்லாம் ரஸ்தாவில் செல்லும் பாதசாரிகளுக்கோ, விளக்கு மரங்களுக்கோ ஆபத்து ஏற்படாதபடி அவர் மோட்டார் ஓட்டக் கற்றுக்கொண்டு விட்டார்.

மோட்டார் சவாரியை ஒருவாறு பழகிக் கொண்டுவிட்ட வரலக்ஷ்மி இப்பொழுது குதிரை சவாரி செய்யப் பழகி வருகிறார். அவருக்கு நீந்துவதற்குத் தெரியும். பள்ளிக்கூடத்தில்

இண்டாவது பாரம் வரையில் படித்திருக்கிறார். அவரது தாய் பாஷையான தெலுங்கையும், தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய பாஷைகளையும் அவருக்கு எழுதப் படிக்கத் தெரியும்.

வரலக்ஷ்மி பாலராஜு, காமவல்லி ஆகிய படங்களில் நடனம் ஆடியுள்ளார். எனினும், அவருக்கு உண்மையில் நடனம் ஆடத் தெரியாது. அந்தக் குறையைப் போக்கிக் கொள்ளுவதற்காக அவர் இப்பொழுது முயன்று வருகிறார்.

பள்ளிக்கூட நாடகங்களில் பங்கெடுத்துக் கொண்டுள்ள போதிலும் வரலக்ஷ்மிக்கு தொழில் நாடகங்களில் அநுபவம் கிடையாது. பால்யம் முதலே அவருக்கு சங்கீதத்திலேயே மிகுந்த 'பைத்தியம்' ஏற்பட்டிருந்தது. ஆரம்ப சிக்ஷைகளை தம் பெரியப்பாவிடம் பெற்றபின் இப்பொழுது ஸி. என். பாண்டுரங்கன் என்ற சங்கீத வித்வானிடம் சங்கீத சிக்ஷை பெற்று வருகிறார்.

வரலக்ஷ்மி ஆந்திர தேசத்தில் அநேக கச்சேரிகளில் பாடியிருக்கிறார். சென்ற வருஷம் சென்னை ரஸிக ரஞ்சனி சபாவிலும், கோகலே ஹாலிலும் இரு கச்சேரிகளில் பாடினார்.

வரலக்ஷ்மி படங்களில் பாடியிருப்பதெல்லாம் தம் சொந்தக் குரலிலேயே தான். அதே போல் 'வரலக்ஷ்மி' என்ற பெயரும் அவரது சொந்தப் பெயரேயாகும். வரலக்ஷ்மி நோன்பன்று பிறந்ததால் அவருக்கு இந்தப் பெயர் இடப் பட்டதாம்.

வரலக்ஷ்மிக்கு இப்பொழுது இருபதாவது வயது நடந்து வருகிறது. அவர் 1929 வருஷம் ஆகஸ்ட் மாதம் கடைசி வாரத்தில் பிறந்தார். அவர் ஜகம்பேட்டையில் ஒரு பெரிய மிராசுதாரராயிருந்த நீலாசலம் நாயுடுவின் இரண்டாவது புத்திரியாவார். அவருக்கு இரண்டு சகோதரிகளும், மூன்று சகோதரர்களும உள்ளனர்.

வரலக்ஷ்மியின் தமக்கை சுப்புலக்ஷ்மி குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறார். தங்கை விமலா பரத நாட்டியத்தில் பயிற்சி பெற்று வருகிறாள். அவளும் எதிர் காலத்தில் நாட்டியத்திலோ, சினிமாவிலோ ஒரு நக்ஷத்திரமாகி விடக் கூடும்.

வரலக்ஷ்மியின் தம்பியான ராஜா பாதர் கேமிராமென் கோட்னிஸிடம் சேர்ந்து வேலை பயின்று வருகிறார். லக்ஷ்மிபதி, ஸ்ரீநிவாஸன் ஆகிய இரு தம்பிகளும் பள்ளியில் படித்து வருகின்றனர்.

வரலக்ஷ்மியின் தகப்பனார் சுமார் இரண்டு வருஷங்களுக்குமுன் காலமானார். அது முதல் அவரது தாயாரான சாவித்திரி அம்மாள் தான் இவர்களையெல்லாம் பராமரித்து வருகிறார்.

சுமார் ஐந்தே கால் அடி உயரமும், அழகான முகமும், புறு புறுப்பான கண்களும், கவர்ச்சிகரமான அங்க அமைப்பும் பொருந்திய வரலக்ஷ்மி மாநிறமுடையவர். அவர் வீட்டிலும் சரி, ஸ்டுடியோவிலும் சரி, பிறருடைய ஜோலிக்கே போக மாட்டார். வீட்டில் இருக்கும் போதெல்லாம் அவரை ரேடியோ பெட்டியிடம் பார்க்கலாம்.

"நாம் ஒரு பெரிய நக்ஷத்திரம், ஆதலால் மற்றவர்கள் நடித்த படங்களை நாம் பார்ப்பது கௌரவக் குறைவு? என்றெல்லாம் அவர் நினைப்பது கிடையாது. தமிழ்ப் படம் என்று பெயர் சொல்லிக் கொண்டு எந்தப் படம் வந்தாலும் அதை அவர் தவறாமல் பார்த்து விடுவது வழக்கமாம்.

வரலக்ஷ்மி தற்போது அசோகா பில்ம்ஸார் தயாரித்து வரும் வாலி சுக்ரீவா என்ற தெலுங்குப் படத்தில் நடித்து வருகிறார். சில தினங்களுக்கு முன்பு தான் அவரை ஸ்ரீ. லேனா செட்டியார் தாம் தயாரிக்க ஏற்பாடு செய்து வரும் வனசுந்தரி தமிழ்ப் படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்.

நவ ஜீவனம்

திரைக்கதை

மகாதேவன் சிறந்த காந்தி பக்தர்; தொழிலாளிகளின் அன்பர்; கவி; நாடக ஆசிரியர். அவர் தொழிலாளிகளின் வாழ்க்கையை நாடகமாக எழுதி நடித்து அதன் மூலம் கிடைத்த வரும்படியில் எளிய வாழ்க்கை நடத்தி வந்தார். அவருடைய தம்பியான பிரபாகர் பி. ஏ. படித்துக் கொண்டிருந்தான். தம்பி எப்படியாவது பி. ஏ. பாஸ் செய்து ஒரு உத்தியோகத்திற்குப் போய் விட்டால் தம் கஷ்டம் தீர்ந்துவிடும் என்று நம்பியிருந்தார் மகாதேவன்.

மகாதேவனின் மனைவி அன்னபூரணியும் கணவனுக்கேற்றவள். தன் மைத்துனனை பிரபாகரை அவள் தன் சொந்த மகனைப்போல் பாவித்து வளர்த்து வந்தாள். பிரபாகர் எதிரில் தம் மகளான சாந்தியைக் கூட துச்சமாக மதித்து வந்தாள்.

பிரபாகர் தன் அண்ணன், அண்ணி இருவரிடமும், குழந்தை சாந்தியிடமும் அபார வாஞ்சை வைத்திருந்தான். அண்ணனைப் போல் பிரபாகரும் எளிய வாழ்க்கையிலும், தொழி

லாளர் நலன்களிலும் அக்கரை கொண்டிருந்தான்.

பிரபாகர் படித்துவந்த அதே கல்லூரியில், தனலக்ஷ்மி மில்லின் சொந்தக்காரரான ராவ்பஹதூர் துரைசாமி முதலியாரின் மகள் கமலாவும், வட்டிக்குக் கடன் கொடுக்கும் நடராஜ முதலியாரின் மகள் வனஜாவும் படித்து வந்தனர்.

ஒரு சமயம் கல்லூரியில் வாக்குப் போட்டி நடைபெற்றது. போட்டி, 'பணக்காரர்-ஏழை' என்பதைப் பற்றியது. கமலா பணக்காரப் பெண்ணானதால் அவர்கள் பக்கமாகப் பேசினாள். அத்துடன் 'ஏழை பணக்காரனானால் அவனும் பணக்காரர்களைப் போல் தான் நடப்பான்' என்று வாதித்தாள். பிரபாகர் அதைமறுத்து, "ஏழை பணக்காரனானால் கட்டாயம் படாடோபத்திற்கு ஆளாகமாட்டான். எளியவர்களின் கஷ்டங்களை நன்கு அறிந்து அதற்குப் பரிகாரம் தேடப் பாடுபடுவான். ஒத்தாசை செய்வான்" என்று வாதாடினான். இந்த வாதத்தின் மூலம் கமலாவுக்கு பிரபாகர் மீது ஒரு பற்று ஏற்பட்டது. பிரபாகருக்கும் கமலாவின் வாக்கு வன்மையால் அவளது பரிச்சயம் ஏற்பட்டது. நாளடைவில் இருவரும் காதலர்களாகிறார்கள்.

அதே சமயம் வனஜாவும் பிரபாகரைக் காதலித்தாள். ஆனால் பிரபாகர் அவளைக் காதலிக்காமல் சிநேகிதி என்ற தோரணையிலேயே பழகி வந்தான்.

கமலாவுக்கு அண்ணாசாமி என்ற ஒரு சகோதரன் இருந்தான். அவன் ஒரு நாடோடி. இஷ்டம் போல் பணத்தை விரயம் செய்து திரிபவன். அவனுக்கு வனஜாவிடம் காதல். அதை அடைய அவன் அரும்பாடு படுகிறான். ஆனால், வனஜா அதற்கு உடன்படவில்லை.

கமலாவின் கல்லூரிப் படிப்பு முடிந்ததும் அவள் கலியாணத்தைப் பற்றிய பேச்சு எழுந்தது. அவளுடைய

தகப்பனாரும், சகோதரனும் வரனைப் பற்றி சர்ச்சை செய்து கொண்டிருந்தனர். அந்தச் சமயம் அங்கு வந்த கமலா விஷயத்தை அறிந்தாள். அவளுடைய தகப்பனார் அவளது கலியாணத்தைப் பற்றி அவளிடமே கேட்டார். அவள் இஷ்டப்பட்ட வரனுக்கே கலியாணம் செய்து வைப்பதாகவும் கூறினார். கமலா தன் காதலன் பிரபாகரின் பெயரைச் சொல்கிறாள். அதைக் கேட்டது தான் தாமதம்; அவள் சகோதரனான அண்ணாசாமிக்கு அடங்காத கோபம் வந்து விட்டது. "போயும் போயும் அந்த ஏழை பிரபாகர்தானா உனக்கு அகப்பட்டான். உன் அந்தஸ்துக்குத்தக்க வரனாக இருக்க வேண்டாமா?" என்று வாதிக்கிறான். முடிவில் ராவ்பகதூர் தம் பெண்ணின் இஷ்டப்படியே கலியாணத்தை நடத்த முடிவு செய்கிறார்.

இந்த விஷயம் மகாதேவனுக்குத் தெரிந்ததும் அவர் கொஞ்சம் வருத்தப்படுகிறார். 'பணக்காரர்கள் சம்பந்தத்தில் அநேக கஷ்டங்கள் இருக்கின்றன. நம் அந்தஸ்துக் கேற்ற வகையில் கலியாணம் செய்து கொள்ள வேண்டும்' என்று நினைக்கிறார். ஆனால் பிரபாகர் கமலாவைக் காதலிப்பதாகச் சொன்னதாலும், தம்பியின் மீது கொண்டுள்ள பாசத்தாலும் மகாதேவனும் அன்னபூரணியும் அதற்குச் சம்மதிக்கின்றனர்.

கலியாணம் வெகு விமரிசையாக நடக்கிறது. அதில் இருவரைத் தவிர மற்ற அனைவருக்கும் சந்தோஷம் தான். அந்த இருவர் வனஜாவும், அண்ணாசாமியும்தான்.

அண்ணாசாமிக்கு 'பிரபாகர் தன் அந்தஸ்துக்கேற்ற வரன் இல்லை' என்பது. வனஜாவுக்கு தான் காலித்தவனை அடைய முடியாமல் போய் விட்டதே என்ற வருத்தம்.

பிரபாகர் கலியாணமான சில நாட்களிலேயே ராவ்பகதூர் காலமாகிவிட்டார். அவர் சாகும் போது தம் மில்லையும், சொத்துக்களையும் கமலா

பெயரில் எழுதி வைத்து விடுகிறார். அண்ணாசாமி நாடோடியாக இருந்ததாலேயே அவர் இப்படிச் செய்தார்.

ராவ்பகதூர் காலமான பிறகு மகாதேவனையும் தம்முடன் வந்து வசிக்கும்படி பிரபாகர் வேண்டுகிறான். மகாதேவன் தம் தம்பியின் வேண்டுகோளைத் தட்ட மனமின்றி மனைவி, குழந்தையுடன் பங்களாவுக்கு வந்து சேருகிறார். எனினும், அவர் அங்கு எளிய வாழ்க்கையையே நடத்துகிறார்.

எளிய வாழ்க்கை நடத்திய பிராகரனை கமலா தம் அந்தஸ்துக் கேற்ற வாறு இருக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறாள். அவளுடைய வேண்டுகோளுக்காக அவன் உடைகளை முதலில் மாற்றுகிறான். கதர் ஜிப்பாவிலிருந்து டசூர் ஸூட்டாகிறது. இப்படியே அவனை ஆடம்பரப் பிரியனாக்கி விடுகிறாள் கமலா.

பிரபாகரின் மீது காதல் கொண்ட வனஜா தனக்கு சந்தர்ப்பம் தேடிக் கொண்டிருந்தாள். பிரபாகரின் சகோதரனது குடும்பம் பங்களாவை அடைந்த நாள் முதல் அவள் மெள்ள அங்கு வந்து சேரத் தலைப்பட்டாள். கமலாவும் அன்னபூரணியும் ஒற்றுமையாக இருப்பதைக் கண்டு அவர்களை பிரிக்க முதலில் தந்திரம் செய்கிறாள். கமலாவுக்கு துர்ப் போதனை செய்து அன்னபூரணியின் மீது வெறுப்பை உண்டு பண்ணுகிறாள். பிறகு கமலாவை லேடீஸ் கிளப்பில் சேர்த்து விடுகிறாள. கமலாவுக்கு கிளப் 'பைத்தியம் ஏற்பட்டுவிடுகிறது.

மில்லில் தொழிலாளிகளின் தொந்திரவு அதிகரிக்கிறது. ராவ்பகதூர் காலமாவதற்கு முன்பே தொழிலாளர்கள் தங்கள் குறைகளை அவரிடம் சொல்லி அதற்குப் பரிகாரம் செய்யும்படி வேண்டிக் கொண்டிருந்தனர். அவர் காலமான பிறகு பிரபாகர் அந்த ஸ்தானத்திற்கு வந்ததும் அவர்கள் கொஞ்சம் நம்பிக்கை அடைந்தனர். "மகாதேவன் சகோதரன் பிரபா

கரன் தொழிலாளரின் கஷ்டங்களை உணர்வான். அதற்குப் பரிகாரம் செய்வான்'' என்று வெகுகாலம் காத்திருந்தனர். பல முறை சந்தித்துப் பேசினர். ஆனால் பிரயோசனம் ஏதுமில்லை. முடிவில் 'ஸ்டிரைக்' செய்வது என்று தீர்மானித்தனர்.

இச் செய்தி மகாதேவனுக்கு எட்டியதும், அவர் தொழிலாளர் தலைவரைக் கண்டு, தாம் பிரபாகரனிடம் சென்று எப்படியும் குறைகளைத் தீர்க்க ஏற்பாடு செய்வதாகச் சொல்கிறார். பிரபாகரனை மகாதேவன் ஆபீஸில் சந்தித்து, தொழிலாளர்களின் குறைகளைச் சொல்கிறார். அதற்குப் பரிகாரம் செய்யும்படியும் கேட்கிறார். ஆடம்பரத்தில் லயித்துவிட்ட பிரபாகர் அகம்பாவத்துடன் அண்ணனென்றும் பாராமல், துச்சமாகப் பேசி அனுப்புகிறான்.

என்றும் எதிர்த்துப் பேசாத பிரபாகரன் அன்று அப்படிக் கூறியதால் மகாதேவன் மனம் உடைந்து வீடு திரும்புகின்றார். மாலை தொழிலாளர் கூட்டம் நடைபெறுகிறது. அதில், மகாதேவன் தான் பிரபாகரைக் கண்டு பேசியவற்றைக் கூறுகிறார். கூட்டத்தின் முடிவில் 'ஸ்டிரைக்'செய்வது, என்று தொழிலாளர் தீர்மானிக்கின்றனர்.

பிறகு மகாதேவன் பலமுறை பிரபாகரை வீட்டில் சந்தித்து தொழிலாளர் குறைகளைப் பற்றிப் பேசுகிறார். ஒருநாள் பிரபாகர் ஆபீஸிலிருந்து வந்த சமயம், இதே மாதிரி மகாதேவன் அவனைச் சந்தித்துத் தொழிலாளர் பிரச்னையைப் பற்றிக் கேட்கிறார். பிரபாகர் மகாதேவன் தனக்கு எதிராக வேலை செய்வதாக எண்ணி. அவரை மரியாதைக் குறைவாகப் பேசுகிறான். இதனால் முன்பே மனமுடைந்திருந்த மகாதேவன் அவ்வீட்டை விட்டுப் போய்விட யோசிக்கிறார்.

ஒரு நாள் கமலா வேண்டுமென்றே அன்னபூரணி பூஜை செய்துகொண்டிருந்த அறைக்குள் பூட்ஸ் காலுடன் வந்து சண்டைக்கிழுக்கிறாள். அன்னபூரணிக்கும் கமலாவுக்கும் வாக்குவாதம் நடக்கும்சமயத்தில்பிரபாகர் வருகிறான். அவன் கமலா பக்கம் சேர்ந்து அண்ணியை கன்னத்தில் அடித்துவிடுகிறான். இதைக் கண்ணுற்ற மகாதேவன் இனி அந்த வீட்டில் இருக்கக் கூடாது என்று தம் பழைய வீட்டிற்கே குடிபோய்விடுகிறார்.

முன்பு கடன் வாங்கிய பாக்கிக்காக நடராஜ முதலியார் மகாதேவனின் வீட்டை ஜப்தி செய்து விடுகிறார். அதனால் மகாதேவன் அன்னபூரணி, குழந்தை சாந்தி மூவரும் ஒரு குடிசையில் வசிக்க வேண்டியதாகிறது.

மில்லில் 'ஸ்டிரைக்' ஏற்பட்டுவிட்டதால் பிரபாகர் மன நிம்மதியைத் தேடி வீட்டிற்கு வருகிறான். கமலா லேடீஸ் கிளப்பின் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கப் புறப்படுகிறாள். மன நிம்மதிக்காக அவளை பீச்சுக்குப் போக அழைக்கிறான் பிரபாகர். அவள் "நான் தலைமைவகிக்கப் போக வேண்டும்'' என்று சொல்லி அவனது அழைப்பை ஏற்க மறுக்கிறாள்.

சமயம் எதிர்பார்த்திருந்த வனஜா பிரபாகரை [நெ]ருங்குகிறாள். அவனைத் தன் வலையில் விழச் செய்ய சாகசங்கள் புரிகிறாள். தன் மனைவிக்குத் துரோகம் செய்யக் கூடாது என்ற எண்ணத்தில் பிரபாகர் தன் உணர்ச்சியை அடக்கிக்கொள்கிறான். வனஜாவுக்குப் புத்தி சொல்லி அனுப்புகிறான்.

ஒரு நாள் லேடீஸ் கிளப்பில் நாடகம் நடைபெறுகிறது. அதற்காக பிரபாகரையும் அழைக்கிறாள் கமலா. அவன் லேபர் ஆபீஸரைப் பார்க்கப் போக வேண்டும் என்கிறான். வனஜாவும் தனக்கு உடம்பு சரியில்லை என்று சொல்கிறாள். கமலா மாத்திரம் நாடகத்திற்குச் செல்கிறாள். நாடகத்தில், பணக்காரப் பெண் ஒருத்தி ஒரு ஏழைப் பையனை மணக்கிறாள். ஏழையை மற்றொரு பெண்ணும் காதலிக்கிறாள். பணக்காரப் பெண் ஆடம்

பரத்தில் மூழ்கியவள். ஒரு நாள் கிளப்புக்கு கணவனை அழைக்கிருள். அவன் வர மறுக்கவே தனிமையாகவே போகிருள். அச் சமயம் தனிமையாக இருக்கும் ஏழைக் கணவனை எதிர்நோக்கி யிருந்த பெண் வந்து அடைகிருள் இருவரும் உல்லாசமாக இருக்கின்றனர். இக்கட்டம் வந்ததும் கமலாவுக்கு என்னவோ போலிருந்தது. நாடகத்தின் கதை அவள் வாழ்க்கையையே சித்தரிப்பதாக இருந்தது. அவள் சட்டென்று வீடு திரும்பினாள்.

வனஜா தோல்வி மேல் தோல்வி ஏற்பட்டாலும் விடாமல் மேலும் தொடர்ந்து தான் விரும்பியதை அடையப் பாடுபடுகிருள். அன்றும் இப்படித்தான். கமலா நாடகதிற்குச் சென்றதும் வனஜா அங்கு வந்து பிரபாகரைப் பலவந்தமாக அணைக்கப் போகும் சமயம் கமலா கிளப்பிலிருந்து அங்கு வந்துவிடுகிருள். பிரபாகர் என்ன சொல்லியும் கேட்காமல் கண்டபடி அவனை ஏசிப் பேசுகிருள். அதனல் கோபம் கொண்ட பிரபாகர் அவளைப் பிடித்துத் தள்ளுகிருன். சற்றும் எதிர்பாராது நடந்ததால் கமலா மாடிப்படிகளில் விழுந்து உருண்டு படுகாயமடைகிருள். பிரபாகர் மனம் நொந்து தனக்கு இக்கதி ஏற்பட்டது தனது அண்ணன் அண்ணிக்குச் செய்த துரோகமே என்று நினைக்கிருன். அதற்காகத் தம் அண்ணனையும் அண்ணியையும் காண விரைகிருன். அதே சமயம் அங்கு வந்த அண்ணுசாமி வேகமாகப் போகும் பிரபாகரைத் தடுக்கும் சமயம் அவனைப் பிடித்துத் தள்ளிச் செல்கிருன் பிரபாகர். அண்ணுசாமி தனது சகோதரியின் நிலை கண்டு விஷயத்தைத் தெரிந்து கொள்கிருன். அத்துடன் அவனது காதலியான வனஜாவுடன் பிரபாகர் உல்லாச வாழ்க்கை நடத்தியதும் தெரிகிறது. தன்னைத் தள்ளியது, சகோதரியைப் படுகாயப்படுத்தியது, காதலியை அபகரித்தது ஆகிய மூன்று விஷயங்களையும் வைத்துக் கொண்டு பிரபாகரைச் சுட்டுக் கொல்வது என்ற தீர்மானத்தில் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வேகமாகக் கிளம்புகிருன். அதைக் கண்டு வனஜா அவனைத் தடுத்து பிரபாகர் மீது ஒரு குற்றமுமில்லை என்று பிடித்து நிறுத்துகிருள். அவளது பிடியிலிருந்து விடுபட அண்ணுசாமி முயற்சிக்கும் சமயம் துப்பாக்கி எதிர்பாராத வகையில் சுட்டுவிடுகிறது. குண்டு வனஜாவின் மீது பாய்கிறது.

பிரபாகர் அண்ணன் வீடு சேர்ந்து அவர்களிடம் மன்னிப்புக் கேட்கும் சமயம் அண்ணுசாமி அங்கு தோன்றி அவனைச் சுடுகிருன். தற்செயலாக அங்குவந்த அன்னபூரணியின் கையில் குண்டு பாய்கிறது. உடனே அண்ணுசாமி அங்கிருந்து ஓடிவிடுகிருன்.

காயமடைந்த கமலா நடந்தவைகளை அறிந்து தான் செய்தது பெருந்தவறு என்று உணர்கிருள். பிறகு கணவனிடமும், மகாதேவன், அன்னபூரணி முதலியவர்களிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிருள்.

தொழிலாளர் குறைகள் அனைத்தையும் தீர்ப்பதாக பிரபாகரன் மகாதேவன் சொல்படி ஒப்புக் கொள்கிருன். தொழிலாளரும் இனி என்ன குறை இருந்தாலும் அதற்காக ஸ்டிரைக் செய்யாமல் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும். உற்பத்தியைப் பெருக்கி தேசத்தை வளம் செய்ய வேண்டும் என்று பிரதிக்ஞை செய்து கொள்ளுகின்றனர்.

வருந்துகிறோம்

பிரபல பி. வி. ராஜன் பட்டணம் பொடிக் கம்பெனியின் கூட்டு முதலாளியான ஸ்ரீ. கே. நாராயண ஐயரின் பாரியையான ஸ்ரீமதி மங்களம்மாள் தம் 53 வது வயதில் அரக்கோணத்தில் காலமான செய்தி கேட்டு வருந்துகிருேம். ஸ்ரீ. ஐயருக்கும் மற்ற உறவினர்களுக்கும் நம் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

லாபத்தில் பங்கு

[21-ம் பக்கத் தொடர்ச்சி]

சரி என்று பட்டதும் அவர் வெற்றி கண்ட வீரனைப் போல் எதிரில் மேஜை மீதிருந்த சிகரெட் டின்னிலிருந்து சிகரெட் ஒன்றை எடுத்து லாவகமாகப் பற்ற வைத்தார். பிறகு புகை மண்டலத்தைக் கிளப்பிய வண்ணம் ஹாலைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சுமார் ஒரு மணி நேரம் கடந்திருக்கும். அப்பொழுதும் அவருடைய சிந்தனை கலையவில்லை. கடந்த நாட்களை விட எதிர்காலத்தைப் பற்றியே சிந்தித்து வந்தார். இத்தனை நாட்கள் வரை அவர் வெறும் பட டைரெக்டர்தான். இனி அவர் ஒரு கம்பெனியின் பாகஸ்தர், பட டைரெக்டர் என்ற இரு பட்டங்களைப் பெறப் போகிறார். அவர் சேரப்போகும் கம்பெனியின் மூலம் அவர் லட்சக் கணக்காகப் பணத்தைத் திரட்டப் போகிறார். இம்மாதிரி குமார் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

அவர் சிந்தனையைக் கலைப்பது போல் பங்களாவினுள் அதிவேகமாக நுழைந்தது ஒரு மோட்டார். அதிலிருந்து கிருஷ்ணா ஸ்டுடியோவின் முதலாளி ஆதிமூலம் புன்னகை பூத்த முகத்துடன் இறங்கினார். அவரைக் கண்ட குமார் சோபாவிலிருந்து எழுந்து சென்று வரவேற்றார். இருவரும் சோபாவில் உட்கார்ந்ததும் "மிஸ்டர் குமார், என்ன முடிவிற்கு வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார் ஆதிமூலம்.

"முடிவு என்ன? இனி நீங்கள் தான் சொல்ல வேண்டும்."

"நானா! நன்றாகச் சொன்னீர்கள். எதுவும் உங்கள் கையில் தான் இருக்கிறது."

"என் கையிலா; ஆச்சரியமாக இருக்கிறதே!"

"ஆமாம், ஆச்சரியம்தான். சரி; உங்களுக்கு எங்கள் ஸ்டுடியோவில் சேர சம்மதந்தானே?.........இன்றே அதற்கு ஒரு முடிவு தெரிய வேண்டும்."

"இதற்காகத்தானே நானும் நேற்றே என் வேலையை ராஜீநாமாச் செய்து விட்டு 'ரெடி'யாகக் காத்துக் கொண்டிருக்கிறேன். விஷயத்தை இன்று என்ன, இப்பொழுதே முடித்து விடலாம்."

குமார் நாதன் ஸ்டுடியோவிலிருந்து விலகிவிட்டது கேட்டு ஆதிமூலத்திற்கு அளவற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர் சந்தோஷ மிகுதியால் குமாரின் முதுகின் மீது செப்பை தட்டி "சபாஷ்! நீர் தான் சரியான பேர்வழி. நான் சொன்ன இரண்டு நாட்களுக்குள்ளாகவே இப்படிச் செய்வீர்கள் என்று நான் நம்பவே இல்லை" என்றார்.

"நீங்கள் அவ்வளவு கண்டிப்பாகப் பேசியதனால்தான் நான் வேலையை ராஜீநாமாச் செய்தேன். சரி, இனி மேற்கொண்டு நடக்க வேண்டியதைப் பார்க்கலாம். நீர் லாபத்தில் எவ்வளவு பங்கு கொடுப்பீர்கள்? மாதம் எவ்வளவு அலவன்ஸ் கொடுப்பீர்கள்? படம் டைரெக்ட் செய்தால் அதற்காக என்ன சன்மானம்?" என்று சரமாறியாகக் கேள்விகளைக் கேட்டார் குமார்.

"நியாயமானபடி எல்லாம் கொடுக்கிறேன். போதுமா?"

"அது முடியாது. எதையும் கரார் கண்டிப்பாகப் பேசிக் கொள்ள வேண்டும். இல்லா விட்டால் பிறகு மனஸ்தாபந் தான் ஏற்படும்."

"மாதம் எவ்வளவு அலவன்ஸ் வேண்டும்? பங்கு எவ்வளவு?"

"மாதம் இப்பொழுது நாதன் கொடுத்து வந்தது போல் இரண்டாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். லாபத்தில் பாதி கொடுக்க வேண்டும்."

ஆதிமூலம் திகைத்தார். சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு "மாத அலவன்ஸே அதிகமாக இருக்கிறது. அது போகட்டும் என்றால் லாபத்தில் பாதி கேட்கிறீர்களே. கொஞ்சம் யோசித்துச் சொல்லுங்கள்" என்றார்.

"யோசிப்பதே கிடையாது. இதற்குக் குறைந்தால் என்னால் முடியாது. ஹ-ம், பட டைரெக்ஷனுக்காக—சொல்ல மறந்து விட்டேனே—ஒரு படத்திற்கு இருபதினாயிரம் கொடுக்க வேண்டும். இதற்கும் அலவன்ஸ், லாபம் இவைகளுக்கும் சம்பந்தமே கிடையாது."

"நீங்கள் என்ன யோசித்துச் சொல்கிறீர்களா? இல்லை, விளையாடுகிறீர்களா? இந்தக் காலத்தில் எப்படியாப்பட்ட நல்ல படமாக இருந்தாலும் வசூலாக மாட்டேன் என்கிறது. அப்படியிருக்க உங்களுக்கு இவ்வளவு பணம் எங்கிருந்து கொடுப்பது? முதலில் பங்கு கொடுக்கிறேன் என்றேனே, அதைக் கண்டே நீங்கள் சந்தோஷிக்கவேண்டும்"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் டைரெக்ட் செய்த படம், நான் இருக்கும் கம்பெனி என்றாலே படத்திற்கு நல்ல லாபம் கிடைக்கும். அப்படியிருக்க எனக்கு ஏன் இத்தனையும் கொடுக்கக் கூடாது? உங்களுக்கு இஷ்டமில்லை யென்றால் விட்டுவிடுங்கள்" என்றார் குமார் சாந்தமாக.

ஆதிமூலம் அதற்கு மேல் பேச முடியாமல் சோபாவை விட்டு எழுந்தார். பிறகு கடைசியாகக் குமாரைப் பார்த்து "நன்றாக யோசித்துச் சொல்லி அனுப்புங்கள். உங்களுக்காக எங்கள் ஸ்டுடியோ கதவு எப்பொழுதும் திறந்தேயிருக்கும்" என்று சொல்லிவிட்டு நேராகச் சென்று காரில் ஏறிக் கொண்டார். சில வினாடிகளில் காரும் பங்களாவை விட்டு வெளியேறியது.

ஆதிமூலம் அப்படிச் சொன்னதைப் பற்றி குமார் சிறிதும் மன மாறுதல் அடையவில்லை. அவர் தம் திறமையில் நம்பிக்கையுடையவர். ஆதிமூலம் இல்லாவிட்டால் இன்னொருவர் கட்டாயம் அவருக்கு உதவி செய்ய-குமாரைக்கொண்டு பணம் சம்பாதிப்பதற்காக—வருவார் என்ற நம்பிக்கை இருந்தது. அதனால் அலட்சியமாக உட்கார்ந்து சிகரெட்டைப் பற்றவைத்து புகையைக் கிளப்பிக் கொண்டிருந்தார்.

அதுவரை உள்ளே வேலைகளை கவனித்துக் கொண்டிருந்த மல்லிகா யாரோ வந்து சென்றது அறிந்து குமாரைக் காண வந்தாள். குமார் எவ்வித மாறுதலுமின்றி உட்கார்ந்திருந்ததைக் கண்டு "யார் வந்தது?" என்று கேட்டாள்.

"அதுதான், கிருஷ்ணா ஸ்டுடியோ முதலாளி ஆதிமூலம் வந்திருந்தான்" என்றார் அலட்சியமாக குமார்.

"என்ன விசேஷம்? உங்களை வேலைக்குக் கூப்பிட வந்திருந்தாரா?"

"ஆமாம். ஆனால் நான் போட்ட நிபந்தனைகளைக் கண்டு பயந்து விட்டான்."

"பிறகு?"

"பிறகு என்ன? இவன் இல்லாவிட்டால் இன்னொருத்தன். இன்றே பார். எவனாவது ஒருத்தன் வந்து அக்கிரிமெண்ட் பண்ணிக் கொள்கிறான்" என்று திடநம்பிக்கையுடன் சொன்னார் குமார்.

"எவன் வரப்போகிறானோ, அக்கிரிமெண்ட் பண்ணிக்கப் போகிறானோ! ஹூம், இருந்ததை விட்டுவிட்டு இப்படி கொம்புக்குக் கொம்பு தாவலாமா?" என்று அங்கலாய்த்துக் கொண்டாள் மல்லிகா.

"இந்தப் பெண்களே இப்படித்தான். சொன்னால் தெரியாது; தனக்காகவும் தெரியாது. இதற்கு என்ன செய்வது? சரி, இது என் வேலை நீ இதற்காகக் கஷ்டப்பட வேண்டாம்."

"நான் இதில் பங்கெடுத்துக் கொள்ளாமல் வேறு யார் எடுத்துக் கொள்வது? உங்களுடைய வாழ்விலும், தாழ்விலும் எனக்கும் கொஞ்சம் பங்குண்டல்லவா?"

"போதுமே உன் போதனை" என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஒரு கார் அவர் பங்களாவினுள் அதி வேகமாக நுழைவதைக் கண்டு "மல்லிகா, உள்ளே போ. யாரோ வருகிறார்கள்" என்றார். மல்லிகா மின்னல் வெட்டுப்போல் அவ்விடத்தி லிருந்து மறைந்து விட்டாள்.

சில வினாடிக்குள் காரிலிருந்து ஒரு வாலிபன் இறங்கி பூட்ஸ் சப்தத்துடன் ஹாலினுள்ளே வேகமாக நுழைந்தான். குமாரைக் கண்டு பல் எல்லாம் தெரியும்படி சிரித்துக் கொண்டே "ஹல்லோ, குமார்! ரொம்ப சந்தோஷச் செய்தி. நீ இப்படிச் செய்வாய் என்று எனக்கு அப்பொழுதே தெரியும். இனி என்ன, அக்ரிமென்ட் செய்து கொள்ளலாமா?" என்று கேட்டான்.

குமார் அவனைத் தன் அருகில் உள்ள சோபாவில் உட்கார வைத்து விட்டு "டே, மூர்த்தி" என்று கூப்பிட்டார்.

சிறிது நேரத்தில் வேலைக்காரன் மூர்த்தி வந்தான். அவன் வந்ததும், "ஸ்ரீதர், என்ன வேண்டும்? கூல் டிரிங்கா, காப்பியா, கொக்கோவா?" என்றான்.

"கூல் டிரிங்கே இருக்கட்டுமப்பா" என்றான் ஸ்ரீதர்.

மூர்த்தி கூல் டிரிங் கொண்டுவர உள்ளே சென்றதும், "குமார், சட்டென்று சொல். இன்றைக்கு நல்ல நாளாம். இன்றே உன் அக்ரிமென்டைச் செய்து கொண்டு படத்திற்காகவும் பூஜைபோட்டாக வேண்டும். எல்லாம் தயாராகத் தான் வந்திருக்கிறேன், என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான் ஸ்ரீதர்.

"அவசரப்படுகிறாயே. அக்ரிமென்ட் என்றால் லேசா? இன்று ஏதாவது அவசரத்தில் எழுதிக் கொண்டு, பிறகு சண்டை பிடித்துக் கொள்வதா?" என்றார் குமார்.

"அது தான் சொல்கிறேனே, உன்னுடைய விருப்பம் என்ன சொல்லு?"

"ஸ்டுடியோ நிர்வாகம் பூராவும் என் கீழ் இருக்க வேண்டும். லாபத்தில் பாதி பங்கு கொடுக்க வேண்டும். மாதம் இரண்டாயிரம் ரூபாய் அலவன்ஸ் கொடுக்க வேண்டும். விர நான் டைரெக்ட் செய்யும் படத்திற்கு இருபதி

னாயிரம் சன்மானம் கொடுக்க வேண்டும் இதற்கெல்லாம் சம்மதமா?" என்றார் குமார்.

ஸ்ரீதர் இவைகளைக் கேட்டு ஆச்சரியமடைந்தான். ஒரு முறை குமாரைப் பார்த்து புன்னகை புரிந்து, "என்ன குமார், விளையாடுகிறாயா? இவ்வளவும் எவன் கொடுப்பான்? அவன் ஸ்டுடியோவை வைத்துக் கொண்டிருப்பதா, திவால் ஆவதா? நன்றாக யோசித்து நியாயமாகக் கேள்" என்றான்.

"ஸ்ரீதர். நீ என் நண்பன். ஆனால் நாம் பேசுவது வியாபார விஷயம். இதில் மாத்திரம் கரார் கண்டிப்பாக இருக்க வேண்டும். உனக்கு என்னை வைத்துக் கொள்ள வேண்டுமானால் இந்த நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும். இல்லாவிட்டால் வேண்டாம். நாம் எப்பொழுதும் போல் நண்பர்களாகவே இருக்கலாம்."

"நான் ஒன்று சொல்கிறேன், கேட்கிறாயா குமார்? நீ கேட்டபடியே மாதம் இரண்டாயிரம் ரூபாய் அலவன்ஸ் எடுத்துக் கொள். உன் மேல்பார்வையில் ஸ்டுடியோ இருக்கட்டும். நீ டைரெக்ட் செய்யும் படத்திற்கு வேண்டுமானாலும் ஏதோ நியாயமாகப் பார்த்து ஒரு தொகை போட்டுக்கொள்ளலாம். ஆனால் லாபத்தில் மாத்திரம் பங்கு கொடுக்க முடியாது."

"அதெல்லாம் முடியாது. என் நிபந்தனைகளுக்கு உட்பட்டால் நான் வருகிறேன்."

"சரி, உன் இஷ்டப்படியே லாபத்தில் கால் பாகம் எடுத்துக்கொள்."

"ஹூம். சும்மாவா கொடுக்கப் போகிறாய்? நான் வேலை செய்து சம்பாதித்தால் அதில் கொடுக்கப் போகிறாய். இதற்கு என்னவோ இப்படிப் பேசுகிறாயே."

"சும்மா யார்தான் கொடுப்பார்கள்? அதிருக்கட்டும் நான் சொல்கிறபடி செய்கிறாயா?"

"என்ன சொல்லு."

"நீ கேட்டபடியே ஒப்புக் கொள்கிறேன். நீ ஒரு நிபந்தனைக்கு உட்பட வேண்டும்."

"சொல்லேன்."

"லாபத்தைப் போல் நஷ்டத்திலும் சரி பங்கு நீ எடுத்துக் கொள்வாயா? சொல். இப்பொழுதே—இங்கேயே வக்கீலை வரவழைத்துக் காரியத்தை முடித்து விடலாம்."

"அது நடக்காது. முதலில் நஷ்டம் வந்தால் அல்லவா அதைப்பற்றிப் பேசு. நான் இருக்கிறேன் என்றாலே படம் வெற்றிதான்."

"அதை எப்படிச் சொல்வது? ஒரு சமயம் தோல்வியும் ஏற்படலாமல்லவா? இதை நன்றாக யோசித்துப் பார்."

"யோசிக்க பிரமேயமே இல்லை. எனக்குத் தெரியும் என் திறமை. அதனால் தான் தைரியமாகச் சொல்கிறேன். நஷ்டமென்ற பேச்சுக்கே இடம் கிடையாது."

"உனக்குத்தான் தைரியம் இருக்கிறதே நஷ்டம் ஏற்படாதென்று. ஏன் நஷ்டத்தையும் பகிர்ந்து கொள்வதாக ஒரு வரி அக்ரிமெண்டில் சேர்க்க சம்மதிக்க மாட்டேன் என்கிறாய்?"

"அது வேறு விஷயம் ஏன் வீண் பேச்சு. உனக்குச் சம்மதமா, இல்லையா?" என்றார் கண்டிப்பாக குமார்.

அதே சமயம் மூர்த்தி கிரஷைக் கொண்டு வந்து இருவர் கையிலும் கொடுத்தான். ஸ்ரீதர் கிரஷை கையில் வாங்கிக் கொண்டு, "உன் நன்மையை உத்தேசித்துத்தான் இத்தனை நாள் சொல்லிக் கொண்டிருந்தேன். இரவு பகலாக உழைத்து ஓடாகிறாயே என்ற எண்ணத்தில் தான் நான் நாதனைக்கூட விடச் சொன்னேன். நீ நன்றாக இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காகத் தான் உனக்கு லாபத்திலும் பங்கு கொடுக்கச் சம்மதித்தேன். நீயோ என்றால் இப்பொழுது உச்சியில் ஏறி உட்கார்ந்து கொள்கிறாய்!" என்றான்.

"ஸ்ரீதர்! வீண் வாதம் வேண்டாம். உனக்கு என் நிபந்தனைகள் சம்மதமா சொல்லு? இல்லாவிட்டால் வேண்டாம். வீணாக ஏன் பழைய குப்பைகளைக் கிளறுகிறாய்?"

"நானா குப்பைகளைக் கிளறுகிறேன்? உண்மையைச் சொன்னால் அப்படித்தான் இருக்கும். நியாயமாக நான் சொன்னதை ஒப்புக்கொள்."

"முடியாது."

"உன்னை நம்பியதற்கு இதுதான் பலன்! உனக்குப் போய் நான் பங்கு கொடுக்கிறேன் என்று சொன்னேனே! உனக்கு ஏற்றவன் நாதன்தான். ரத்தம் சுண்ட வேலை வாங்கிக் கொண்டு, 'இந்தா' என்று இரண்டு துட்டைப் போட வேண்டும். அப்படியில்லாமல் லாபத்தில் பங்கு என்றால் நீ ஒப்புக் கொள்வாயா?"

குமாருக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் உரத்த குரலில், "டேய்! என்ன சொன்னே? நாதன் என்னை வாட்டி வதக்கி காசை வீசி எறிந்தான். நான் அதைப் பொறுக்கிக் கொண்டு வந்தேன் என்றா? இப்பொழுது நீ மாத்திரம் இங்கு எதற்காக வந்திருக்கிறாய்?

சும்மா என்னை உட்காரவைத்துப் பணத்தைக் கொடுக்கவா? என்னைக்கொண்டு பணத்தைக் கொள்ளை அடிக்கத்தானே வந்திருக்கிறாய்?" என்றார்.

ஸ்ரீதரும் கோபமடைந்தான். கையிலிருந்த கிரஷ் கிளாஸை அப்படியே மேஜை மீது வைத்துவிட்டு, "வார்த்தையை அதிகம் உபயோகிக்காதே. நான் உன்னை சும்மா உட்காரவைத்துப் பணத்தைக் கொடுக்க எனக்கு என்ன பைத்தியமா? என்னவோ கஷ்டப்படுகிறாயே என்று வந்தால் என்னவெல்லாமோ பேசுகிறாயே? வைக்க வேண்டிய இடத்தில் வைக்க வேண்டிய உன்னை இப்படி வந்து கேட்டால் கர்வம்தான் ஏற்படும். இனி லாட்டரி அடிக்கப் போகிறாய் பார்; அப்பொழுது தெரியும். இந்த சினிமா உலகத்தில் உன்னை எவன் வேலைக்கு வைத்துக்கொள்கிறான் பார்க்கலாம்" என்று கர்ஜித்த வண்ணம் சோபாவிலிருந்து எழுந்தான்.

குமாரும் கோபமாக எழுந்து "போடா போ! என்னவோ பயமுறுத்துகிறாயே. சினிமா உலகமே உன் கையின் கீழ்தான் இருக்கிறதோ? நீ இல்லாவிட்டால் வேறு ஒருவன் வருகிறான்" என்றார்.

"அது எந்த ஒருவன் வருகிறான் என்று நானும் பார்க்கிறேன். என்னைப் பற்றி உனக்கு நன்றாகத் தெரியாது. இனிமேல் தெரிந்துகொள்வாய்" என்று சொல்லி அவன் மளமள வென்று காரில் ஏறிச் சென்றான்.

குமார் கொஞ்சம் கடுமையாகப் பேசினாலும் ஸ்ரீதர் போனபிறகு அவர் மனம் சஞ்சலத்திலாழ்ந்தது. அவர் நாதன் ஸ்டுடியோவிலிருந்து விலகியதே ஸ்ரீதருடைய தைரியத்தில்தான். குமார் அந்த ஸ்டுடியோவிலிருந்து விலகியதற்கும் ஸ்ரீதரும், ஆதிமூலமுமேதான் காரணம். ஆனாலும் ஸ்ரீதர்தான் அதிகமாக தைரியம் கொடுத்தவன். ஆசை வார்த்தை காட்டியவன். அவனே இப்படி நடந்து கொண்டு விட்டதைக் கண்டு குமார் மனங் கலங்கினார். இனி என்ன செய்வது என்று சிந்தனையிலாழ்ந்தார்.

சிறிது நேரம் நின்று சிந்தனையிலாழ்ந்த பிறகு குமார் மெள்ள சோபாவில் உட்கார்ந்து சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டார். அது வரை உள் பக்கம் இருந்து நடந்தவைகளைக் கவனித்துக் கொண்டிருந்த மல்லிகா ஹாலினுள் வந்து எதிரே இருந்த சோபாவில் உட்கார்ந்தாள். ஆனால் இச்சமயம் அவள் ஒன்றும் பேசவில்லை. முதலிலேயே கணவன் கோபமடைந்திருப்பதுடன் மனம் உடைந்திருப்பதும் அவளுக்குத் தெரியும்.

சிறிது நேரம் வரை குமார் மல்லிகாவின் முகத்தைப் பார்த்தபடியே சிகரெட்டைப் புகைத்துக் கொண்டிருந்தார். பிறகு என்ன தோன்றியதோ "மல்லிகா!" என்றார்.

"ஹூம்" என்றாள் மல்லிகா.

"பார்த்தாயா உலகத்தை! நேற்று வரை என்னை ஆசை காட்டி இன்று என்னை அடியோடு மோசம் செய்து விட்டார்கள். இவர்களை நம்பி பாலிய சிநேகிதத்தை இழந்தேன்" என்று வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னார் குமார்.

"வருத்தப்பட்டு என்ன பிரயோசனம்? இவர்கள்தான் உங்களுக்குச் சாதிப்பவர்கள்! நாதன் உங்களை மோசம் செய்பவர் என்று உங்களுக்கு இவர்கள் தூபம் போட்டு விட்டார்கள். நீங்களும் அதில் மயங்கி, நாதனை பகைத்துக் கொண்டீர்கள். அவர் கால் தூசுக்கு இவர்கள் சமம் ஆவார்களா?"

குமார் மௌனமாக உட்கார்ந்திருந்தார். அவரால் எவ்வித பதிலும் சொல்ல முடியவில்லை.

"இவ்வளவு பிரபலமடைந்த பிறகு கூட உங்களிடத்தில் இவர்களுக்கு அவநம்பிக்கை இருக்கிறதே? நீங்கள் சினிமாப் பிரபஞ்சத்தில் சரியாக அறிமுகமாகாத காலத்தில் நாதன் உங்கள் பேச்சைக் கேட்டுப் பணத்தைப் போட்டாரே? அப்பொழுது லாபம் வரும் என்றா எண்ணினார்? யோசித்துப் பாருங்கள். இவ்வளவு பெரிய உபகாரியை, ஆப்த நண்பரைப் பகைத்துக் கொண்டு விட்டீர்களே" என்று அங்கலாய்த்தாள் மல்லிகா.

குமார் கண்களில் நீர் ததும்ப, "மல்லிகா! பழையவற்றைக் கிளறாதே. நான் செய்தது தவறு என்று ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இனி என்ன செய்வது? நாதன் முகத்தில் எப்படி விழிப்பேன்" என்றார்.

"பேசாமல் போய் அவரிடம் நடந்தவற்றைச் சொல்லுங்கள். செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுங்கள். அவர் ஒன்றும் அப்படி வித்தியாசமாக இருக்க மாட்டார், போங்கள்."

"முடியாது, மல்லிகா. நான் இனி அவன் முகத்திலேயே முழிக்க மாட்டேன். இந்த சினிமா வாழ்வே எனக்கில்லா விட்டாலும் பாதகமில்லை. இருப்பதை வைத்துக்கொண்டு சாப்பிடலாம்."

மல்லிகா ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அச்சமயம் ஒரு புதிய கார் மெள்ள பங்களாவினுள் நுழைந்தது. ஆனால் இச்சமயம் மல்லிகாவை உள்ளே

போகும்படி குமார் சொல்லவில்லை. அதற்குப் பதில் இருவருமாக வெளியில் வந்தார்கள். கார் நின்றதும் அதிலிருந்து தலைவிரி கோலமாக நாதன் இறங்கினார். அவரைக் கண்டதும் மல்லிகாவுக்கும் குமாருக்கும் திக்கென்றது. இருவரும் ஏககாலத்தில், "வாருங்கள்!" என்றனர்.

நாதன் பலவந்தமாக புன்னகையை வரவழைத்துக் கொண்டு இருவரையும் ஒரு முறை பார்த்தார். குமார் அவரை கைலாகு கொடுத்து "வா, நாதன். உன்னைப் பற்றித்தான் இப்பொழுது மல்லிகா பேசிக் கொண்டிருந்தாள்" என்று கூறி அவரை உள்ளே அழைத்துச் சென்று சோபாவில் உட்காரவைத்தார். அதற்குள் மல்லிகா உள்ளே சென்று, காப்பி எடுத்து வர வேலை ஆளுக்கு உத்திர விட்டுவிட்டு ஹாலுக்கு வந்தாள்.

நாதனே பேச்சை ஆரம்பித்தார். "குமார், நீ இல்லாமல் எனக்கு ஸ்டுடியோவில் இருக்கவே பிடிக்கவில்லை. உனக்காகத்தான் அது ஆரம்பித்தேனே ஒழிய எனக்காக அல்ல. நீ பாகம் கேட்டாய் அல்லவா. இதோ பார், இந்தப் பத்திரத்தை. உன்னைப்போல் ஸ்டுடியோவில் உள்ள மற்றவர்களும் அதன் வளர்ச்சிக்காக உழைத்திருக்கிறார்கள். உனக்குப் பாகம் கொடுத்து, அவர்களுக்குக் கொடுக்காமல் இருக்கக் கூடாது. அதனால் இதில் 'இந்த ஸ்டுடியோவில் வேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் பாகம்' என்று எழுதியிருக்கிறேன். நீதான் 'ஸ்டுடியோவை மேற்பார்வை பார்த்து நடத்த வேண்டியவன்' என்றும் எழுதியிருக்கிறேன்" என்றார்.

குமாருக்கு என்ன சொல்வதென்றே தோன்றவில்லை. அவர் நாதன் கொடுத்த பத்திரத்தைத் தாழ்மையுடன் பெற்றுக் கொண்டு, நா தழுதழுக்க "நாதன்! உன்னை நான் தப்பிதமாக நினைத்து விட்டேன். நான் செய்த தவறுதலுக்கு என்னை மன்னித்துவிடு" என்றார் கண்களில் நீர் ததும்ப.

நாதன் கண்களிலும் நீர் ததும்பியது. அவர் மெல்லிய குரலில், "குமார் நீ செய்தது தவறே இல்லை, நான் உள்ளுக்குள், வரும் லாபத்தை பங்கு போட்டு போனஸ், ஸ்பெஷல் போனஸ் என்று கொடுத்துக் கொண்டு வந்தேன். அம்மாதிரி மறைமுகமாகச் செய்வதில் லாபம் வந்த வருஷம் போனஸ் கொடுத்து, வராத வருஷம் அது இல்லை என்றால் தொழிலாளர் முணு முணுப்பார்கள். நீ வெளிப்படையாகச் செய்யும்படி தூண்டிய வேலை என்னை இந்தக் கஷ்டங்களிலிருந்து காப்பாற்றியது. இனி போனஸ், அது இது, என்று என்னை நச்சரிக்க மாட்டார்கள் அல்லவா? நீ செய்த உதவிக்கு நான் உனக்கு என்ன கைமாறு செய்வது..." என்றார். குமார் பதில் சொல்லாது மௌனமாக உட்கார்ந்திருந்தார்.

"என் வயிற்றில் பாலை வார்த்த உங்களுக்கு நான்தான் கைமாறு செய்யவேண்டும். இந்தாருங்கள்" என்று, மல்லிகா வேலைக்காரி கொண்டுவந்த சூடான காப்பியை நாதனிடம் நீட்டினாள்.

அதைக் கையில் வாங்கிக் கொண்ட நாதன், "இது நல்ல கைமாறுதான்" என்று சொல்லிச் சிரித்தார். அச்சமயம் தான் அவர் மனம் நிம்மதியடைந்தது போலிருந்தது.

அது வரை மனங் கலங்கி இருந்த குமாரும் அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டார்.

இந்திய நாட்டில் விதவைகளின் எண்ணிக்கை ஏராளம்?

இயற்கை இன்பத்தை இழந்து, இகழ்ச்சிக்குட்பட்டு, வாழ்நாளை வீண் நாளாய்க் கழிக்கும் கன்னியர் அநேகம்.

விதவையின் கண்ணீர்

விதவைகள் சம்பந்தமான பிரச்னை விரிவாக விளக்கப்பட்டுள்ள புஸ்தகம். எல்லோரும் அவசியம் படிக்கவேண்டியது.

விலை 8 அணாதான்

மோஹன் அன் கோ,
தபால் பெட்டி நெம்பர் 493
கொழும்பு — இலங்கை

குண்டூசி டைரி



134155

ஏப்ரல் 1949

தேதி

2. 'கல்பனா' சென்னை வெல்லிங்டனில் முதன் முறையாக திரையிடப்பட்டது.

8. 'பவளக்கொடி' பத்திரிகைக் காட்சி இரவு 9-30 மணிக்கு பிரபாத்தில் நடைபெற்றது.

9. 'பவளக்கொடி' சென்னை பிரபாத், ஸன், ஸரஸ்வதி ஆகிய மூன்று தியேட்டர்களிலும் முதன் முறையாகத் திரையிடப்பெற்றது.

'சிறுவர்களுக்கான படங்கள்' சம்பந்தமான ஒரு மசோதா இந்திய பார்லிமென்டில் கொண்டு வரப்பட்டது.

போலோநாத்—சரோஜா கோஷ்டியின் நடனம் சென்னை ரஸிக ரஞ்சனி சபாவில் நடைபெற்றது.

17. திருவாரூரில் நடைபெற்ற தமிழ்த் திருநாளில் டி. கே. எஸ். பிரதர்ஸின் 'ஔவையார்' நாடகம் நடைபெற்றது.

தியேட்டர்களில் புகை பிடிப்பதைத் தடை செய்ய, சுகாதார மந்திரிக்கு ஒரு மகஜர் அனுப்பப்பட்டது,

23. தென்னிந்திய பத்திரிகாசிரியர் சம்மேளனத்தின் வருஷாந்திர மஹாநாடு கனம் பிரதமர் குமாரசாமி ராஜா தலைமையில் நடந்தது.

24. கனம் மந்திரி சஞ்சீவி ரெட்டி தலைமையில் சினி டெக்னிஷ்யன்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

25. பிரஸ் கிளப் அங்கத்தினர்களின் 'தியாகம்' நாடகம் நடைபெற்றது.

புத்துநோய் நிவாரண நிதிக்காக டி. கே. எஸ். பிரதர்ஸின் 'ஔவையார்' நாடகம் கனம் பிரதமர் குமாரசாமி ராஜா தலைமையில் நடைபெற்றது.

29. ராஜன் பாபு ஜெமினி ஸ்டுடியோவுக்கு விஜயம் செய்தார். ஸ்ரீ. எஸ். எஸ். வாஸன் காந்திஜி ஞாபகார்த்த நிதிக்கு லக்ஷம் ரூபாய் நன்கொடை அளித்தார்

30. காந்திஜி நிதிக்காக எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் சங்கீதக் கச்சேரி ஒன்று பம்பாயில் நடைபெற்றது.



வாடா மலர் பதிப்பகத்தின்
புதிய மூன்று புத்தகங்கள்

1. வத்ஸலையின் வாழ்க்கை

"சாவி"யின் சிறு கதைகள் அடங்கியது. அழகிய மூவர்ண அட்டையுடன் கூடியது — 0 8 0

2. முயல் வேட்டை

சிறுவர்களுக்கான சிறு கதைகள், அழகிய வர்ணப் படங்களுடன்—ஒன்பது கதைகள் கொண்டது — 0 4 0

3. ஜிம்மியும் சீனுவும்

சிறுவர்கள் விரும்பிப் படிக்கக் கூடிய புத்தகம். சித்திரங்கள் மூலம் கதை சொல்லப்பட்டிருக்கிறது. பின் பக்கம் 'ஸ்கேல்' இருக்கிறது. — 0 4 0

ஏஜெண்டுகளுக்கு 25% கமிஷன் உண்டு.

தனிப் புத்தகம் வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

வாடாமலர் பதிப்பகம்

2, லட்சுமிநாராயணன் தெரு, பழைய மாம்பலம், சென்னை.

Printed by P. Arunachalam at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi), at 25 Godown Street, Madras-1. Telephone 4316.

முயற்சி வீணாவதை தடுக்கலாம்

உங்களுக்கு தேவையான அச்சு வேலைகளை தீர ஆலோசித்துத் திட்டத்துடன் செய்தீர்களானால், குறைந்த செலவில் நிறைந்த பலனை அடையலாம்.

அழகாக அச்சடிப்பது ஒரு தனிக் கலை. அதற்கு நீண்ட நாள் அனுபவமும், பழக்கமும் அவசியம். பல வருஷங்களாக நாங்கள் நானாவித அச்சு வேலைகளைச் செய்து நல்ல அநுபவம் பெற்றுள்ளோம். நீங்கள் கண்டபடி முயற்சி செய்து நஷ்டம் அடைவதற்குப் பதில், எங்கள் அநுபவத்தைக் குறைந்த செலவில் உபயோகித்துக் கொண்டு மிகுந்த பயனடையலாம்.

போன் : 4037

தந்தி : "PRINTHOUSE"

கமர்ஷியல் பிரின்டிங்
அன் பப்ளிஷிங் ஹவுஸ்

45/46, அரண்மனைக்காரத் தெரு :: சென்னை